## ★ தடுக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு பிரமுகர் பலர் ராஜினுமா செய்வதாக பயமுறுத்தல்?

# நாகநாதன் -- ராசதுரை மோதல்!

## போராட்டப் புலிகளின் பதவி வேட்டை!

(புதினம் ஒற்று நிருபர்)

**நல்லூர் பிரதிநிதி டாக்டர் நாகநாதன் கையை ஓங்கிக் கொண்டு,மட்டக்களப்புப்பிரதிநிதி இராசதுரையைப் பார்த்து உறுமினர்! இராசதுரையும் டாக்டருடைய எதிர்ப்பைச் சமாளிக்கத் தம்மைத் தயார் செய்து கொண்டு நிமிர்ந்தார் இந்த நிலையை மற்றவர்கள் தடுத்து விட காரசாரமான வாய்ச் சண்டை நடந்தது.**

ஆட்சேபனைகள், வாக்குவாதங்களுடன், அமளிதுமளியாகக் கொழும்பில் நடைபெற்ற தமிழரசு எம்.பீக்களின் கூட்டத்தில் எதிரேவரும் செனட்டர் தெரிவுக்கு திரு எம். மாணிக்கத்தையே நிறுத்துவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது!

சனப்பிரதிநிதிகள்சபைக் கட்டடத்தில் சென்ற புதன்கிழமை மாலை தமிழரசுக் கட்சி எம்.பிக்களின் கூட்டம்நடைபெற்ற போது, செனட்டர் தெரிவுக்கு யாரை நியமிப்பது என்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரமும் (தமிழ் காங்கிரஸ்) கலந்து கொண்டார். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கத்தை செனட்டராக்க வேண்டுமென்று பிரேரிக்க திருவாளர்கள் இராசமாணிக்கமும்இராசதுரையும் மறுத்துவிட்டனர்.

"அறப்போர் முன்னணி" த் தலைவர் திரு. டபிள்யூ. அரியநாயகத்தையே அடுத்த செனட்டராக்கவேண்டுமென மட்டக்களப்பு மக்கள் சமர்ப்பித்திருந்த மகஜர்களையும், அனுப்பியிருந்த தந்திகளையும் கூட்டத்தில் காட்டி, மட்டக்களப்பு மக்களின் விருப்பத்திற் கெதிராகத் தாம் நடக்க முடியாது எனத் திரு. இராசதுரை சொன்னார். அவர் திரு. அரியநாயகத்தைச் செனட்டராக்கவேண்டுமெனக் கேட்ட போது, அதை டாக்டர் நாகநாதன் விடாப் பிடியாக ஆட்சேபித்து மிகக் கடுமையாக எதிர்த்தார்.

திரு. மாணிக்கத்தின் நியமனத்தை திரு. ராசதுரை எதிர்த்ததற்கானகாரணம் கேட்கப்பட்டபோது திரு. மாணிக்கத்துக்கு மட்டக்களப்பு மக்களின் ஆதரவு துளிகூட இல்லையெனவும் அதனுல் கிழக்கு மாகாண தமிழரசுக் கட்சிக் கிளைகள் அவரை நியமிப்பதை விரும்பாமலிருப்பதாகவும் பதில் கிடைத்தது. திரு. மாணிக்கம் யாழ்ப்பாணக் கட்சித் தலைமைப் பீடத்தையும், குடாநாட்டு எம். பிக்களையும் தமது தனிப்பட்ட செல்வாக்கைப் பிரயோகித்து, கைக்குள் போட்டுக் கொண்டு, செனட்டர் தெரிவுக்கு முன்வந்திருப்பதாகவும் மட்டக்களப்பின் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

செனட்டராக திரு. மாணிக்கத்தை நிறுத்துவது என்ற தமிழரசு பாராளுமன்ற குழுவின் தீர்மானத்தைப்பற்றி, மட்டக்களப்பு தமிழரசுக் கட்சிக் கிளையின் செயற் குழுவிலுள்ள முக்கிய பிரமுகர் ஒருவர் 'புதினம்' நிருபரிடம் கூறுகையில் "மட்டக்களப்பு மக்கள் கட்சிமீதும் தலைவர் செல்வாமீதும் வைத்திருந்த நம்பிக்கை அசைக்க முடியாதது. திரு. இராசதுரை மட்டக்களப்புத் தமிழ் பேசும் மக்களின் அபிப்பிராயத்தின் படியே நடக்கிறுர். அவருக்கிருந்த ஆதரவாலும், வாக்குத் திறமையாலும்தான் திருவாளர்கள் நல்லையா, எதிர்மன்னசிங்கம் கதிர்காமர் போன்ற பிரமுகர்களையெல்லாம் மண் கவ்வச் செய்ய முடிந்தது. அப்படிக்கட்சிக்காக உழைத்துவரும் திரு. இராசதுரையின் கோரிக்கை தட்டிக்கழிக்கப்பட்டது ஆச்சரியமாக இருக்கிறது. மட்டக்களப்பு மக்களின் குரல் மதிக்கப்படாததால், கிழக்கு மாகாணத்து பிரமுகர்கள் பலர் இனி அடுக்கடுக்காக ராஜிநாமாச் செய்யவேண்டிநேரிடும்" என மிக வருத்தமாகத் தெரிவித்தார்.

### ஈ. வே. ரா. வும் குன்றக்குடியும்



தமிழ் நாட்டு நாத்திகத் தலைவர் ஈ. வே. ரா. வுக்கும்மதத்தை வளர்ப்பதற் கென்றேஅமைந்த குன்றக் குடி மடத் தலைவரான தமக்கும் இம்மியளவும் வேறுபாடில்லை என்கிறுர் குன்றக் குடி அடிகளார் ஏன்? அடிகளாரே கூறுவதை இந்த இதழின் 9-ம் பக்கத்தில் படியுங்கள்.

# திருக்கேதீச்சரப் பசுக்கள் கசாப்புக்கடைக்கு போயின!

கோவிலுக்கெனப் பொது மக்கள் நேர்த்திக்கடனுக்காக கொடுத்த பசுமாடுகளை கோவில் நிர்வாக பீடம் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்றுவிட்டது! பரிதாபம்! திருக்கேதீச்சரம் கோவிலுக்குரிய சுமார் 300 பசுமாடுகள் ஒரே தினத்தில் ஒரு முஸ்லீமுக்கு விற்பனைசெய்யப்பட்டசம்பவம்'புதினத்'துக்கு தெரியவந்துள்ளது. கோவில் கட்டட திருப்பணிச் செலவுகளுக்கு காசு தேவைப்பட்டதால், கோவிலுக்கு சொந்தமான மாடுகள் இருவாரங்களுக்குமுன் புவிலைப்பட்டதாகவும் அவற்றை வாங்கியவர் லொறிகள் மூலம் வெளியிடங்களுக்கு ஏற்றிச் சென்றதாகவும், அவை இறைச்சியடிப்பதற்காகத்தான் அப்படிப் பெரும் தொகையாக கொண்டு போகப்பட்டிருக்க வேண்டுமென தாம் நினைப்பதாகவும், ஒரு சைவ பக்தர் 'புதினம்' நிருபரிடம் அழாக்குறையாகச் சொன்னுர்.

உயிர்வதையை ஒப்புக்கொள்ளாத சைவமக்கள் தாம் வணங்குகிற சிவாலயத்துக்குச் சொந்தமான பசுமாடுகள் இறைச்சிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதை அறிந்து பெரும் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.


புதினம்
சுவையான செய்திக் கிழமை இதழ்...
வரதர் வெளியீடு
அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**22-10-61 முதல் 28-10-61 வரை**

**மேடம்:** இன்னுஞ் சிறிது காலத்துக்குத் தேகசுகம் பாதிக்கப்படும். இரகசிய சத்துருக்களாலும் தொல்லைகள் ஏற்படும். குடும்பச் சூழ்நிலை திருப்திகரமாக இராது. பிரயாசமும் அதிகமாக இருக்கும்.

**இடபம்:** எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றியடைய முடியும். ஆரம்பத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் பின்பு கருமங்களில் வெற்றியுண்டு. மனதில் அமைதி நிலவாது.

**மிதுனம்:** நண்பர்களும், இனத்தவர்களும் உங்களுக்குச் சமயத்தில் கைகொடுத்துதவுவார்கள். மனதில் பலவித ஆலோசனை உண்டு. தேகசுகம் தொடர்ந்து பாதிக்கப்படும். தொழில்களில் தாமத சித்தியுண்டு.

**கடகம்:** இளைய சகோதரரால் பல உதவியுண்டு. தொழிலில் பலவித முன்னேற்றம் உண்டு. ஆனால் உறவினருடனும் நண்பர்களுடனும் சிறு விரோதங்கள் ஏற்படலாம். தேகசுகவீனமும் காணப்படுகிறது.

**சிங்கம்:** தேகத்தில் உஷ்ணகரம் உண்டு. ஞாயிறு, திங்கள் வாரங்களை அவதானமாகச் செலவிடவும். புதிய தொழில்களில் தாமத சித்தியுண்டு. குடும்பத்தில் சிறுசங்கடங்கள் ஏற்படும்.

**கன்னி:** தொழில் ஸ்தானத்திலும், குடும்பத்திலும் சிறு சச்சரவுகள் காணப்படுகின்றன. திங்கட்கிழமை, பிற்பகலையும் செவ்வாய், புதன் வாரங்களையும் அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்களில் தொழிலில் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** மனதில் ஆறுதலிருக்காது. தேகசுகமும் தொடர்ந்து பாதிக்கப்படும் இனசனங்களுடன் விரோதமும் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் அவதானமாக நடக்கவும். புதன் பிற்பகல், வியாழன், வெள்ளி வாரங்களில் சங்கடங்கள் அதிகமாகலாம்.

**விருச்சிகம்:** தொழில்களில் மத்திமலாபம் உண்டு. பூமியால் நன்மைகள் உண்டு. ஆனால் குடும்பச் சச்சரவுகள் ஏற்படும். தேகசுகமும் நன்றாக இராது. சனிக்கிழமையை அவதானமாகக் கழிக்கவும்.

**தநுசு:** தொழிலில் முன்னேற்றமுண்டு. போதிய லாபம் கிட்டும். ஆனால் கோட் சொல்லுபவர்களால் குடும்பத்தில் சிறு கலகங்கள் ஏற்படலாம். பிதாவழிக் கஷ்டமுமுண்டு.

**மகரம்:** தொழிலில் சிறு முன்னேற்றம் காணப்பட்டாலும் செலவினங்களும் அதிகமாகும். தேகசுகம் நன்றாக இராது. பிரயாசமும் அதிகமாக இருக்கும்.

**கும்பம்:** புதிய விஷயங்களில் ஈடுபட்டு வெற்றியுங் காண்பீர்கள். சத்துரு ஜயமும் கீர்த்தியும் உண்டு. ஆனால் பிதாவழிக் கஷ்டமுண்டு. தேகசுகம் சிறிது பாதிக்கப் படும்.

**மீனம்:** தொழிலில் எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற முடியும். பொருள் விருத்தியுண்டு. ஆனால் மனதில் அமைதி நிலவாது. தேகசுகவீனமும் காணப்படுகிறது.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

## கண்டதும் ... கேட்டதும் ...

### வேண்டேன் அதிக சம்பளம்.

எப்ப பார்த்தாலும் 'எடிட்டர்' எகிறிக் குதிக்கிறார். என்னதான் ரசமான விஷயமாக நான் எழுதிக் கொடுத்தாலும் 'பூ... ஊ! இதுதானா? என்கிறாரே தவிர மனுஷன் ஒரு நல்ல வார்த்தை சொல்லுவாரென்றா நினைக்கிறீர்கள்! அதுதான் இல்லை. சொட்டை தான் சொல்வார். "நீங்கள் புறணிகூறவும் வேண்டாம் உங்கள் சம்பளமும் வேண்டாம்" என்று கூறி வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போக எனக்குத் தெரியாமலில்லை. வேறு வேலையை தேடிக்கொண்டு போக அவர்கள் கொஞ்சம் கூடுதலாகவே சம்பளத்தைப் போட்டுக் கொடுத்துவிட்டால் நான் என்ன பண்றது? முந்நூறு ரூபாய்க்கு அதிகமாக சம்பளம் வாங்கும் உத்தியோகத்தர்களெல்லோரும் இந்த மாதத்திலிருந்து நாலு 'பேர்சன்ட்' தேசிய அபிவிருத்தி வரி கொடுக்கவேண்டியிருக்கேயென்று தலையில் கைவைத்து அழுகிறார்கள். இந்த லட்சணத்தில் வேறு உத்தியோகம் தேடிப் போவது புத்தியா, நீங்களே சொல்லுங்கள்!

'எடிட்டர்' எந்த நாளும் நான் எழுதுவதில் விஷயமில்லை, ஹாஸ்யமில்லை என்று இல்லைப் பாட்டுப் பாடுகிறார். இத்தனை நாளும் இல்லைப் பாட்டுப் பாடுவதில் எனது இல்லக்கிழத்திக்குத்தான் 'நொபல்' பரிசு கிடைக்குமென்றெண்ணியிருந்தேன். இப்ப பார்த்தால் 'எடிட்டர்' அப்பரிசைத் தட்டிக்கொண்டு விடுவார் போலிருக்கிறது.

### சிரிப்பு வருமா சொல்லுங்கள்!

வீட்டில் இருந்தால் 'அவள்' அது இல்லை, இது இல்லை'' என்று நச்சரிக்கிறாளேயென்று ஆபீஸுக்கு வந்தால் 'எடிட்டர்' ஓட ஓட விரட்டுகிறார். நான் எழுதுவது ஹாஸ்யமாக இருக்கவேண்டும், அதை வாசிப்பவர்கள் வயிறு குலுங்கச் சிரிக்கவேண்டும் என்பதே 'எடிட்டரின்' ஆசை. அவருடைய ஆசை நியாயமானதுதானே! பணம் தருபவர் அதுக்கும் ஆசைப்படலாம், அதுக்கு மேலேயும் ஆசைப்படலாம். ''பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாள்' என்பதற்கு நான் இலக்கணமாயிருக்க வேண்டுமென்று மனுஷனுக்கு ஏன் தான் இவ்வளவு ஆசை தெரியாது!

நான் சிரிக்காமல் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதென்றால் இலேசான காரியமா? என்னை — இல்லை எம்மை என்றுதான் வைத்துக்கொள்ளுங்களேன்— பார்த்துத்தான் ஊரே சிரிக்கிறதே, உலகமே சிரிக்கிறதே. அப்படியிருக்க நான் சிரிப்பதெப்படி? ஆசிரியர் அழச் சொன்னால் ஒப்பாரி வைத்தே அழலாம் போலிருக்கு. அவ்வளவு வயிற்றெரிச்சலோடு வாழுகிறேன் நான். ஆசிரியர் ஹாஸ்யம் வேணுமாம், ஹாஸ்யம். ஹாஸ்யம் என்ன கடையில் காசுக்கு வாங்கக் கூடிய சரக்கா? பிறவிக் குருடன் ராச விழி விழிக்க முடியுமா?

### நாய்களின் வாழ்க்கைத் தரம்.

அவள் நாலு நாளாய்க் காய்ச்சல் என்று படுத்துவிட்டாள் அடுப்பில் பூனை தூங்குகிறது. ஹோட்டலிலிருந்து எடுத்துச் சாப்பிடலாமென்றால் 'ரேட்' கூடியிருக்கிறதே தவிர, உணவின் தரம் உயராமல் குறைந்திருக்கிறது. காசைக் கொடுத்துப் பேயைக் கொண்டமாதிரி அந்தச் சாப்பாட்டைப் பணம் கொடுத்து வாங்கி குப்பைத் தொட்டியில் கொட்டவேண்டியிருக்கு. ஏன்? நாய்க்குப் போடலாமே என்று நீங்கள் கேட்கலாம். நாய் வளர்க்க முடியுமென்றால் ஒரு வேலைக்காரனை வைத்து வளர்க்க மாட்டேனா?

இந்தக் காலத்தில் நாய்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கின்றது. முன்பு எச்சில் சோறு தின்ற நாய்கள் இப்பொழுது 'பிளேட்டில் கொண்டு வா!' என்றுகேட்கின்றன. காய்கறிகளையும் வெறும் சாதத்தையும் விழுந்தடித்துக்கொண்டு விழுங்கிய சுணங்கன்கள், கோழி இறைச்சியும் புரியாணியும் இல்லாவிட்டால் உண்ணா விரதம் இருக்கின்றன.

### "குழந்தை அடிமைகள்"

சிலருக்கு நாய் வளர்ப்பதில் நம்பிக்கையில்லை. ஒரு நாய்க் குட்டியை நானூறு ஐஞ்ஞூறு கொடுத்து வாங்குவதைக் காட்டிலும் ஐம்பதை நூற்றைக் கொடுத்து ஒரு 'பொடியைப் பெட்டையை' தத்தெடுத்துக்கொள்வது இலாபகரமானதென்பது அவர்களின் அபிப்பிராயம். அந்தப் 'பொடி பெட்டை' கைமாறும் வரை, தமது சொந்தக் குழந்தையைப் போல அதை வைத்து வளர்க்கப்போவதாக தலையில் அடித்துச் சத்தியம் செய்வார்கள். வீட்டுக்குப் போனதும் 'அதுக்கு' வேலைக்காரன் அல்லது வேலைக்காரி பட்டம் கிடைக்கும். இந்த அடிமை வியாபாரம் இன்றைக்கும் நம் நாட்டில் நடைபெறுகிறது. அது எங்கள் கண்ணுக்குத் தெரியவில்லை'' பிறநாடுகளில் நடப்பது மட்டும் எங்களுடைய கழுகுப் பார்வையில் பட்டுவிடுகிறது. அதைப் பார்த்து 'குய்யோ முறையோ' வென்று கூப்பாடு போடுகிறோம். அதில் குறைச்சலில்லை.

இலங்கை சுதந்திரமடைந்தபோதே 'குழந்தை அடிமை' களுக்கு விமோசனம் அளிக்கப்போவதாக பறைசாற்றினார்கள், ஆட்சியாளர்கள். அக்காலத்தில் சிறையிலிருந்த எத்தனையோ 'குழந்தை அடிமை' கள் தங்களுக்கு விடிவு கிட்டப்போகிறதென்று மகிழ்ந்தார்கள்; தங்களுக்கு வாழ்வு கிடைக்கப்போகிறதென்று வாயைப் பிளந்தார்கள். ஆனால் ஆட்சியாளர் சொன்னபடி செய்யவில்லை. வாக்காளர்களைக் காக்காய் பிடித்து முடிந்ததும் கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டு விட்டார்கள். குழந்தை அடிமைகள் 'வாலிப அடிமை' களாகி இப்போது 'கிழட்டு அடிமை' களாகவும் மாறிவிட்டார்கள். இப்பொழுது ஸ்ரீமாவோ அரசாங்கம் 'குழந்தை அடிமை'களுக்கு அபயமளிப்பதற்குத் திட்டம் தீட்டுவதாக சொல்லப்படுகின்றது. இந்த அரசாங்கமாவது பேச்சோடு நின்றுவிடாது குழந்தைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு சமாதி கட்டுகிறதா, பார்ப்போம்!

வரதர் வெளியீடு

## சைவபாடப் பயிற்சி

கொழும்பு விவேகானந்தா சபையாரின் சைவபாடப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு மிகவும் சிறந்த பயிற்சி நூல்.

சைவப்புலவர் இ. செல்லத்துரை எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு | — 80 சதம் | 6-ம் வகுப்பு | — 1-00 |
| 5-ம் வகுப்பு | — 90 சதம் | 7-ம் வகுப்பு | — 1-15 |
| | | 8-ம் வகுப்பு | — 1-25 |

விற்பனையாளர்:-

ஆனந்தா அச்சகம்-புத்தகசாலை.

226 காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.

# திரை மறைவில்

## அமைச்சரவையில் கருத்து வேறுபாடுகள்.

இந்த மந்திரிசபைப் என்று பதவியேற்றதோ அன்று தொடக்கம் மந்திரி சபையினுள் கருத்து வேறுபாடுகளும் தொடங்கிவிட்டன. ஆனால் சிற்சில சமயங்களில்தான் இக்கருத்து வேறுபாடுகள் உச்சக் கட்டத்தை அடைந்து விடுகின்றன. சென்றவாரம் நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் கருத்து வேறுபாடுகள் கருத்து மோதலாகவே மாறிவிட்டதாக அரசியல் வட்டாரங்களிளெல்லாம் பேசப்படுகின்றது. நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள் உலக சமாதானத்திற்காக அரும்பாடுபட்டுவிட்டுத் திரும்பியதும் நடந்த மந்திரிசபைக் கூட்டத்தில் மற்ற அமைச்சர்களுடன் கோபித்துக்கொண்டு மந்திரிசபைக் கூட்டத்தை விட்டே வெளி நடப்புச் செய்தாராம்! அவர் வெளி நடப்புச்செய்த அரைமணித்தியாலத்திற்குள் நிதியமைச்சர் இராஜினாமாச் செய்யப்போகின்றார் என்ற செய்தி கொழும்பு முழுவதிலும் பரவிவிட்டது.

## மோதலின் காரணம்:

மந்திரிசபைக் கூட்டத்திலிருந்து நிதியமைச்சர் வெளிநடப்புச் செய்தமைக்குக் காரணமென்ன? நிதியமைச்சரின் புதிய வரிகள்தான் அதற்குக் காரணமாம். இம்மாதம் தொடக்கம் தேசிய அபிவிருத்திவரி அறவிடப்படப்போகின்றதல்லவா? ஐநூறு ரூபாவிற்குமேல் சம்பளம் பெறுபவர்கட்கே தேசிய வரி அறவிடப்படவேண்டுமென்றும், அதற்குத்தேவையான திருத்தங்களை உடனடியாகச் செய்யவேண்டுமென்றும் நான்கு அமைச்சர்கள் மந்திரிசபைக் கூட்டத்தின்போது வற்புறுத்தினார்களாம். தான் கொண்டுவந்த வரிகளுக்குத் திருத்தங்களைக் கொண்டு வருவது பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு முரணானது என்றும் அவ்வரியை வாபஸ் பெற்றால் நிதி நிலைமையைச் சமாளிக்க இயலாது என்றும் நிதியமைச்சர் விவாதித்தாராம். நான்கு அமைச்சர்களும் தங்களின் கோரிக்கையை வற்புறுத்தியதன் விளைவாக ஏற்பட்ட வாக்குவாதத்தின் பலனாக நிதியமைச்சர் மந்திரிசபைக் கூட்டத்திலிருந்து வெளி நடப்புச் செய்ய நேரிட்டதாம்.

## கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது:

நிதியமைச்சர் வெளிநடப்புச் செய்ததன் பின்பும் தேசிய அபிவிருத்தி வரிபற்றி ஒரு முடிபைச் செய்யுமாறு நான்கு அமைச்சர்களும் பிரதமரை நெருக்கினார்களாம். எந்த முடிவையும் செய்யாமல் பிரதமர் கூட்டத்தை ஒத்தி வைத்ததாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## மந்திரிசபையில் மாற்றமா?

வரியை விதித்த அதே நிதியமைச்சர் தான் விதித்த வரியில் மாற்றத்தையோ திருத்தத்தையோ கொண்டு வருவது பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு முரணானது என்று நிதியமைச்சர் மந்திரிசபைக் கூட்டத்தில் விவாதித்தாரல்லவா? தேசிய அபிவிருத்தி வரியில் மாற்றமெதையும் கொண்டு வருவதாயிருந்தால் நிதியமைச்சர் தனது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துவிடுவதே முறை. தான் இராஜினாமாச் செய்யவேண்டுமென்பதற்காக நிதியமைச்சர் தேசிய அபிவிருத்தி வரியை இறுகத் தழுவிப் பிடித்துக்கொண்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களிலுள்ளவர்கள் கருதுகிறார்கள். மந்திரிசபையை மாற்றியமைத்துத் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவிற்கு வேறொரு மந்திரி பதவியைக் கொடுப்பதன் மூலம் பிரதமர் இப்போது எழுந்துள்ள எக்கச்சக்கமான நிலையைச் சமாளிக்கலாம் என்று அரசாங்கக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

## என். எம். நிதியமைச்சராவாரா?

திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா நிதியமைச்சர் பதவியிலிருந்து வெளியேறக்கூடும் என்ற பேச்சுப் பரவியதுமே டாக்டர். என். எம். பெரேரா நிதியமைச்சராகக் கூடும் என்ற வதந்தியும் பரவ ஆரம்பித்துவிட்டது. இந்த வதந்தி ஒன்றும் புதிதானதல்ல. பலகாலமாக அடிபட்டு வருகின்றது. இன்றுள்ள நெருக்கடியின் காரணமாக அது மறுபிறப்புப் பெற்றிருக்கின்றது. அவ்வளவு தான். ஆனால் இங்கு இன்னொரு உண்மையையும் சொல்லி வைக்கத்தான் வேண்டும். டாக்டர் என். எம். பெரேராவை நிதியமைச்சராக்குவதன்மூலம் இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்று நம்புகின்றவர்கள் அரசாங்கக் கட்சியில் மட்டுமல்ல; மந்திரிசபையிலேயே இருக்கிறார்கள்.

## பத்திரிகை மசோதா:

பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்குமான நகல் மசோதா ஒன்றை அரசாங்கம் தயாரித்துவிட்டது. அரசாங்கக் கட்சிக் குழுவின் கூட்டத்தில் அந்நகல் மசோதா சென்ற வாரம் நிறைவேறிவிட்டது. விரைவில் அந்நகல் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அரசாங்கக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஈ. ஆர். எஸ். ஆர். செனட்டராவாரா?

இவ்வாரம் காலியாகிய பத்துச் செனட்டர்கள் பதவிகளில் ஐந்து பதவிகளை நியமனம் மூலம் நிரப்பும் உரிமை பிரதமருக்கு உண்டல்லவா? பிரதமர் நியமிக்கப்போகும் ஐந்து செனட்டர்களில் திரு ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமியும் ஒருவராக இருப்பார் என அரசியல் வட்டாரத்திலுள்ளவர்கள்பேசிக்கொள்கின்றனர். மனுஷன் கெட்டிக்காரன்.

## டாக்டருக்கு அனுப்பப்பட்ட தந்திகள்:

திரு. எம். மாணிக்கத்தையே தமிழரசுக் கட்சியின் அபேட்சகராக நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுவிட்டதாக டாக்டர். ஈ. எம். வி நாகநாதன் 'தினகரனுக்கு அறிவித்தாரல்லவா? அந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததும் அறப்போர் முன்னணித் தலைவரும் அவரின் ஆதரவாளர்களும் ஒலிபெருக்கி வீரரின் வீட்டிற்குப் படையெடுத்ததோடு நிற்காது டாக்டர். ஈ. எம். வி. நாகநாதனுக்கு தந்திக்குமேல் தந்திகளை அனுப்பினார்கள். வீண்செலவு செய்துவிட்டார்கள், பாவம்.

— அம்பலத்துறைவோன்

# நடிகர் எஸ். எஸ். ஆரிடம் பொலீஸ் விசாரணை!

பிரபல சினிமா நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனிடம் ஒரு பண மோசடி விஷயமாக மதுரைப் பொலிசார் விசாரித்தார்கள்.

சென்ற தேர்தலின்போது ரத்தினம் என்பவர் எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு ரூபா. 500 கடனாகக் கொடுத்தாராம். பின்னர் கேட்டபோது அந்தப் பணத்தை முத்து என்பவர் மூலம் கொடுத்து விட்டதாகச் சொன்னாராம் ஆனால் தன்னிடம் முத்து பணத்தைத் தரவில்லையென்று ரத்தினம் பொலிசில் அறிவித்திருக்கிறார். அதன்பேரிலேயே சென்னையிலுள்ள ஒரு ஸ்ருடியோவில் நடிகர் ராஜேந்திரனைச் சந்தித்து விசாரணை நடத்தினார்கள்.

## வழிகாட்டி!




"யாழ்ப்பாணப்பகுதிக்கு இப்போது சிறீபஸ் வண்டிகளை அனுப்பவேண்டாமென்று விசாரணை கமிஷன் முன்பு, யாழ்ப்பாண மேயர் கூறியிருக்கிறார்"

— செய்தி



ஸ்ரீதரின் 'தேன் நிலவு' படத்தில் வைஜயந்தியின் எடுப்பான தோற்றம்

# மலையாளத்து அழகிகள்

## தமிழ் சினிமாவுக்கு வந்து விடுகின்றனர்!

தென்னாட்டில் பெண்மணிகளின் இயற்கை அழகுக்குப் பெயர் போன இடம் மலையாளம் ஆனால் மலையாளப் படங்களைப் பார்த்தால் அழகு அதிகம் இல்லாத நடிகைகளே காட்சி அளிக்கின்றனர்!. "நீலகிரியில் நல்ல காப்பிக்கொட்டை கிடைக்காது" என்று கூறுவார்கள்! அதுபோன்றதே இதுவும! மலையாளத்திலிருந்து நல்ல அழகுள்ள நடிகைகளெல்லாம் தமிழ் படங்களில் நடிக்க வந்து விடுகிறார்கள்! காரணம் மலையாளப் படங்களில் நடிப்பதற்கு தமிழ்ப் பட சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு சம்பளம் தான் கிடைத்து வருகிறது!

மலையாளப் படத்தொழில் இன்னமும் குழந்தைப் பருவத்தில் தான் இருக்கிறது. தமிழ்ப் படங்களின் போட்டியை சமாளிக்க முடியாமல் அவை திணறிக்கொண்டிருக்கின்றன. முதன் முதலில் வெளி வந்த மலையாள சமூகப் படம் (1938ல்) மாடர்ன் தியேட்டர்ஸ் வெளியிட்ட "பாலன்" ஆகும் முதல் மலையாள புராணப் படம் "பிரஹலாதா" இது 1941ல்) கே. சுபபிரமண்யத்தால் வெளியிடப்பட்டது. முதல் முதலாக இந்த வருஷத்தில் தான் ஒரு சரித்திர மலையாளப் படம் "உம்மினிதங்கா" வெளிவந்திருக்கிறது. அந்த வருஷத்தில்தான் முதல் மலையாள வர்ணப்படம் ("கண்டம்பெச்ச கோட்டு") மாடர்ன் தியேட்டர்ஸார் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், தென்னிந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு "டூரிங் சினிமா" தோன்றியது. மலையாளத்திலுள்ள திருச்சூரில்தான்! அதன் பெயர் "மூக்கன் டாக்கீஸ்!'

— 'புதுமை'

# கலைப்பெண்களுக்கு விலை குறைவாம்!

## நடிகை சந்திரகாந்தா சொன்னது!

'கலைத்துறையில் இருக்கும் பெண்களுக்கு மதிப்பில்லை' என்று திரைப்பட நடிகை சந்திரகாந்தா கூறியிருக்கிறார்.

"அலுவலகங்களில்பணியாற்றும் பெண்கள் மதிக்கப்படுகிறார்கள். ஆனால் கலைத்துறையில் பணியாற்றும் பெண்கள் நல்ல முறையில் மதிக்கப்படுவதில்லை. தெரிந்தோ தெரியாமலோ கலைப்பணிவாழ் மக்களை மற்றோர் கேவலமாகத்தான் மதிக்கின்றார்கள் ஆனால் சிறிது சிந்தித்தால் தாமும் கலைஞர்களே, கலையின்றி வாழ்வில்லை. கலை ஒவ்வொருவர் இரத்தத்திலும் இரண்டறக் கலந்துள்ளது என்ற உண்மையை நிச்சயம் உணரலாம்"

இவ்வாறு நடிகை சந்திரகாந்தா கூறியிருக்கிறார்.

### பூசாரி சோலைமலை!

இன்று தமிழ்த் திரையுலகில் சிறந்த வசன கர்த்தாவாகத் திகழும் திரு. எம். எஸ். சோலைமலை ஆரம்பத்தில் ஒரு கோயில் பூசாரியாக வேலை பார்த்து வந்தார்.

# எம். ஜி. ஆர். — ஜெமினி நடிக்கும் முதல் படம்!

## ராஜகுமாரி தயாரிக்கிறார்!

டி. ஆர். ராஜகுமாரியின் ஆர். ஆர். பிக்சர்சாரின் புதிய படம் ஒன்றின் துவக்கவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்தப் படத்தில் எம். ஜி. இராமச்சந்திரன், ஜெமினிகணேசன் ஆகியோர் முதன் முறையாக நடிக்கவிருக்கின்றனர்.

மற்றும் இப்படத்தில் எம். ஆர். ராதா, சரோஜா தேவி, சாவித்திரி, டி. ஆர். ராஜகுமாரி ஆகியோர் நடிக்கின்றனர். டைரக்ஷன் டி. ஆர். ராமண்ணா.

# புது முகங்கள்

### ஆர். சிங்காரம்

படங்களிலும், நாடகங்களிலும் நகைச்சுவை நடிப்பை ரசிகர்கள் அதிகம் விரும்புவார்கள். நகைச்சுவை பாத்திரமேந்தி மிக நல்ல முறையில் நடித்து வருகிறார் காமெடியன் ஆர். சிங்காரம். இவர் பல நாடகங்களில் நடித்திருக்கிறார் பல பத்திரிகைகள் இவர் நடிப்பைப் பாராட்டியிருக்கின்றன.

### கே. மோகனா

இன்று திரையுலகில் மின்னும் அநேக நடிகர், நடிகைகள் பலர் ஆரம்பத்தில் நாடகங்களில் நடித்துப் பண்பட்டவர்கள்தாம். அந்த வகையில் நடிகை கே. மோகனா நகைச் சுவையில் நடிப்பில் சிறந்து விளங்குகிறார். ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் இவர் கட்டான உடலும் வெட்டான பார்வையும் கொண்டவர், இவரைத் தென்னகப் பத்திரிகைகள் பல பாராட்டி எழுதியிருக்கின்றன.

### பேபி சசிகலா

குட்டி நட்சத்திரங்கள் வரிசையில் பேபி சசிகலாவையும் சிறப்பாகக் கூறலாம். பேபி சசிகலா இது வரை பத்து நாடகங்களில் நடித்திருக்கிறார், பத்து வயதுள்ள சசிகலா நல்ல முகவெட்டுள்ளவர். பரத நாட்டியம், ஓரியண்டல் நடனங்கள் அழகாக ஆடுவார். நடிப்பதிலும் வசனங்கள் பேசுவதிலும் சிறந்து விளங்கும் சசிகலா சினிமாவில் ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறார்.

### ஆதித்தனாரை எதிர்த்து எம். ஜி. ஆர் போட்டி!

"வரும் பொதுத் தேர்தலில் நீங்கள் நிற்பீர்களா?" என்ற வினா எம். ஜி. ஆரிடம் எழுப்பப்பட்டது. அதற்கு எம். ஜி. ஆர் அளித்த விடையாவது:

"பொதுத்தேர்தலில் மட்டுந்தானா மனிதன் நிற்கிறான்! மனிதன் நடப்பதற்கு நிற்கத்தானே வேண்டியிருக்கிறது! பல்வேறு கொள்கையுள்ள நண்பர்கள் என்னை ஆதித்தனார் நிற்கும் தொகுதியில் அவரோடு போட்டியிட்டு நிற்க வேண்டுமென்று சொல்கிறார்கள்."

# 'ப்' டைரக்டரின் சுய சரித்திரம்!

வடக்கே ராஜஸ்தானிலிருந்து மாறுவேடத்தில் தமிழ்நாட்டுக்குத் தப்பி வந்தவர் டைரக்டர் பீம்சிங்!

1942 ல் நடந்த சுதந்திரப் புரட்சியில் தீவிரப் பங்கெடுத்து பொலிசார் கைது செய்ய வந்த போது டிமிக்கி கொடுத்து விட்டு மாறுவேடத்தில் சென்னை வந்து சேர்ந்தார். அங்கே அவர் சுற்றத்தாரான பிரபல சினிமா டைரக்டர்கள் கிருஷ்ணன்–பஞ்சு அவருக்கு ஆதரவளித்தனர். அவர்கள் முயற்சியால் கோவை ஸ்டுடியோ ஒன்றில் மாறு வேடத்தில் லபெடெறி மேனை வேலை பார்த்து வந்தார். சுதந்திரம் பெற்ற பிறகு மாறுவேடத்தைக் கைவிட்டு, தமிழ்நாட்டில் தமிழராகவே தங்கிவிட்டார்!

# தஞ்சாவூரில் போலி 'முரீது' சாமியார்!

## மூடத்தனத்தால் 'மூளி'யான முஸ்லிம் பெண்கள்!

'குருநாயகம் முஹம்மது ஷரீப்' என்ற பெயர் வைத்துக்கொண்டுள்ள சாமியார் வேடதாரி, 'முரீது' கொடுப்பதாகக்கூறி, முஸ்லீம் பெண்களின் ஈமான், பொருள், மானம் யாவற்றையும் பறித்து வந்தார், என்ற உண்மை தஞ்சை ஜில்லா முஸ்லீம் பிரமுகர்களில் ஒருவரான ஹாஜி எம். ஏ. முஹம்மது இபுருஹிம் சாஹீப் அவர்களின் அறிக்கையிலிருந்து வெளியாகியிருக்கிறது.

ஆரம்பத்தில் இந்த ஆசாமி, தஞ்சை ஜில்லாவில் முஸ்லீம் கிராமங்களில் நுழைந்து, முஸ்லீம்பெண்களுக்கு ஞான வழி காட்டுவதாகக்கூறி, ஏமாற்ற முயற்சித்த போது, ஆங்காங்கேயுள்ள முஸ்லீம்களால் அடித்து விரட்டப்பட்டு, இறுதியில் தஞ்சாவூரில் முகாம் அமைத்து, தன்னுடைய திருவிளையாடலைத் தொடங்கி இந்த விளையாட்டு உச்சகட்டத்துக்கு வந்தபோது, திடீரென உண்மை வெடித்து விட்டது.

### பெண் புரோக்கர்கள்!

இவர் சில பெண் புரோக்கர்களை வைத்துக்கொண்டு, ஆங்காங்கே முஸ்லீம் கிராமங்களில் நுழையச் செய்து, இவருடைய ஞானோபதேசத்தைக் கேட்டால், பூமியிலேயே சொர்க்க வாழ்வு ஆரம்பமாகி விடுமென்றும், பேய், பிசாசு, பூதங்கள் அண்டாதென்றும், வியாதிகள் நீங்கி விடுமென்றும் பிரச்சாரம் செய்யச்சொல்லி, பணக்கார குடும்பங்களில் ஆள் பிடிப்பது இந்த புரோக்கர்களின் வேலை. இவர்கள் வலையில், தஞ்சைஜில்லாவிலுள்ள பல கிராமத்து பணக்கார பெண்கள்சிக்கிக் கொண்டனர். கணவன்மார்கள் வெளிநாடு சென்றிருப்பதால், இவர்கள் தாராளமாக வந்து போக வழியிருந்தது.

### உபதேசம்!

அந்தப் பெண்களுக்கு இவர் செய்துள்ள முரீது உபதேசங்கள் விசித்திரமானவை. "லாயிலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலில்லாஹீ" என்று கலிமா சொல்லக்கூடாதென்றும், அதற்குப் பதிலாக "மெய்யாக, மெய்யாகவே சர்வ மூலக் கலிமாவின் நிருபகரும், மகானுமாகிய யுகவான் வித்து நாயகம் முஹம்மது அயுலாலிஹ் அவர்களே முத்திபாலிப்பு" என்று கூறவேண்டுமென்றும் போதித்தார், (அபூஷாலிஹ் என்றால் ஸாலிஹின் தந்தை என்று பொருள்; இவருக்கு ஸாலிஹ் என்று ஒரு பையன் இருந்திருக்கிறான்.) தொழுகை வழக்கமாக உள்ள முறைப்படி தொழக் கூடாதென்றும், 'நெற்றியைத் தரையில்' வைக்காமல், இவருடைய மேற்கூறப்பட்ட வாசகத்தைச் சொல்லி, இருகைகளையும் கீழே தொங்கவிட்ட நிலையில் குனிந்து, இரு கைகளையும் ஆகாயத்தை நோக்கி உயர்த்துவது" என்றும் கூறி, பெண்களுக்கு இவரே தொழக் கற்றுக் கொடுத்தார்' இது நாளொன்றுக்கு மூன்று வேளையாகவும், ஆறு வேளையாகவும் போதனை செய்தார். நோன்பு வைத்துக் கொண்டு பகல்முழுவதும் பட்டினியாக இருக்கக் கூடாதென்றும், சத்துள்ள ஆகாரங்களை நீக்கிசாதாரண உணவை சாப்பிடலாமென்றும் சொல்லிக் கொடுத்தார். முஸ்லிம் பெண்களின் பெயரை தபமணி, செபமணி என்று மாற்றி வைத்தார்.

### ரகசியம்!

இவருடைய முரீது ரகசியங்களை வெளியே சொன்னால், தலையில் வியாதிவருமென்றும் பிறக்கக் கூடிய சந்ததிகள் கூன், குருடாகவும், பைத்தியக்காரர்களாகவும் பிறக்குமென்றும் வைத்தார். ஆரம்பத்தில் ரகசியமாகவே இந்த வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் இந்த வழியைப் பின்பற்ற விரும்புபவர்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்ககூடாதென்றும் தன்னிடமே நேராக அனுப்பி வைக்க வேண்டும் என்றும் சொல்லி, அவர்களைக் கொண்டே ஆட்களைப் பிடித்தார்.

"இதுமட்டுமா! அவரிடம் முரீது பெறுபவர் பெரும்பாலும் யௌவனப் பெண்களும், ஒரு சில ஆண்களுமேயாவர். அப்பெண்களோடு பர்தாயின்றி, சரசமாக இருப்பதோடு, முரீது கொடுக்கும் போது, அத்தர் சந்தனம், மணம் கமழும் பிரத்தியேக அறையில் தனிமையில் பெண்ணை அழைத்துச் சென்றே தருகிறார்... முரீது பெற தன் மனைவியோடு சென்ற சில கணவன்மார்கள் அவர்கொடுத்த ஒருவகை மருந்தை சாப்பிட்டு மதிமயங்கி ஒன்றும் புரியாது இருந்ததையும், மனைவியை கணவனை விட்டும் பிரிக்க அவர் கையாண்ட சூழ்ச்சிகளையும் அவரிடம் முரீது பெற்றவரே தான் ஏமாற்றப்பட்ட கோர சம்பவத்தை முன்வந்து சொன்னார்!!

### ஏமாற்றல்!

இவர் தமது ஸ்தாபனத்துக்கு, சமத்துவ சன்மார்க்க சங்கம் என்று பெயர் வைத்துக்கொண்டார். ஏமாந்து வருகிற பெண்களிடம் மெம்பர் பாரத்தில் கைரேகை வைக்கச்சொல்லி, முதலில் சிறுதொகையைப் பெற்று பிறகு பெருந்தொகையைப் பெற்றுள்ளார் .... கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் தனது தங்க நகைகளை (3000 மதிப்புடையவைகளை) அப்படியே கொடுத்திருக்கிறது.... யைச் சேர்ந்த தனது வீட்டை விற்றுப் பணம் கொடுக்கப்போகும்போது சந்தேகப்பட்டு பிடிக்கப்பட்டது. இந்தப் போலி 'முரீது' நாடோடியாக இருந்து தஞ்சாவூரில்பிராமணர்கள் வாழும் பகுதியில் ஒரு பெரிய வீட்டை வாங்கி, தான் ரகசியமாகப் போய் வருவதற்கு வசதியாக அமைத்துள்ளார். பேங்கிலும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் அவர் கணக்கில் இருப்பதாக சொல்லப்படுகிறது. வீட்டில் 14 வயதிலிருந்து 35 வயது வரையுமுள்ள பெண்களுக்கும், 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் தனியிடங்கள் ஏற்பாடுசெய்து வைத்திருந்ததாகவும் நிரந்தரமாகப் பல பெண்கள் பல இரவுகள் தங்கியிருந்ததாகவும் தெரிய வருகிறது.

### முஸ்லிம் பிரமுகர்கள்!

இந்த போலி 'முரீது'சாமியார் பற்றி விஷயங்கள் விரிவாகப் பரவவே, அவருடைய கொள்கைகளையும், உண்மைகளையும் விசாரிக்க ஐயம்பேட்டை, ராஜகிரி, பண்டாரவாடை ஆகிய ஊர்களைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்கள், தஞ்சைக்கு வந்து அங்கிருந்த இரண்டொரு பெரியார்களை அழைத்துக்கொண்டு அவர் இருப்பிடத்துக்குப் போய், பேட்டி கேட்டதாகவும், அவர் உள்ளே அழைத்ததாகவும் அவருடன் விவாதித்ததாகவும் தெரிகிறது. அந்த விவாதத்தின் போது, அவருக்கு கலிமாவே சொல்லத் தெரியவில்லை என்பதும், இஸ்லாம் பற்றி ஒன்றும் அறியாதவர் என்பதும் விளங்கியது.

இதற்கிடையில், வாசலில் பெருங்கூட்டம் கூடிவிடவும் பொய்யான வதந்திகள் பரவவும் போலீஸ் அதிகாரிகள் போலி சாமியாரையும் அவருடனிருந்த பெண்களில் சிலரையும், போலிஸ் லாரியில் ஏற்றிச் சென்றனர். முஸ்லிம் பிரமுகர்களும் போலிஸ் ஸ்டேசனுக்குச் சென்றனர்.

முஸ்லிம்பிரமுகர்கள் தங்கள் நிலையை விளக்கினர். சாமியார், அவர்கள் தனது வீட்டில் உத்தரவில்லாமல் புகுந்ததாகவும், சாமான்களைத் திருடியதாகவும் வாக்குமூலம் கொடுத்தார். சாமியாருடைய வாக்கு மூலப்படி ஏழு முஸ்லிம் பிரமுகர்களும் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடப்பட்டுள்ளனர். போலீஸார் வழக்கை ஆராய்ந்து வருகின்றனர்.

### யார் அந்த சாமி?

இதன் பின் அந்த போலி 'முரீது' சாமியார் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில், "நான் ஈ. வே. ராமசாமிப் பெரியாரின் சீடன்! அவர் கொள்கைகள் எனக்குப் பிடித்தவை. சாதிமத வேறுபாடுகளை ஒழிக்கவே என் இயக்கத்தை நடத்துகிறேன்" என்று கூறியுள்ளார்.

இந்த ஆசாமியைப் பற்றி 'மறுமலர்ச்சி, விசாரித்ததில் 'அண்டக்குளம்' என்ற ஊரைச் சேர்ந்தவரென்றும், திருச்சி பீம நகரில் கொஞ்சக் காலமிருந்து "பெண்கள் முரீது கம்பெனி"யை ஆரம்பித்ததாகவும், அங்குள்ள முஸ்லிம்கள் விரட்டவே, தஞ்சை ஜில்லா சீர்காழி, ராஜகிரி பக்கம்போய் அதே முயற்சியை மேற்கொண்டதாகவும், அங்கும் விரட்டப்படவே தஞ்சாவூரில் ஹிந்து மக்கள் வாழும் பகுதியில் குடியேறிக்கொண்டு, இந்த ஏமாற்று வேலையை மேற்கொண்டதாகவும் தெரியவந்திருக்கிறது.

இந்த நபரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்பல. தஞ்சை ஜில்லாவில் ஒரு ஹாஜியார். ஹஜ்செய்த தமது மனைவியும், இந்த நபரும் கூடா தொடர்புடன் இருந்ததைக் கண்டு, தனது மனைவியைத் தலாக்கொடுத்து விரட்டியிருக்கிறாராம். பல கணவன்மார்கள், இவ்விதம் விரட்டியிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

—'மறுமலர்ச்சி'

## பெண்ணின் உழைப்பு இருபதுமடங்கு அதிகம்!

தொழில் துறையில் புதுமை புகுத்திய ஜி. டி. நாயுடு அவர்கள் ஒரு சமயம் ஒரு சுவையான செய்தியைக் கூறினர்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு நான் நடத்திய கண்காட்சியில் இயந்திர விசை பொருத்தப்பட்ட இரு எஃகு பொம்மைகளை நிறுவியிருந்தேன். அவற்றில் ஒன்று ஆண். மற்றொன்று பெண்.

ஆண் பொம்மையின் பையில் ஓர் அணா இட்டு விசையை இயங்கச் செய்தால் சுவைமிக்க சூடான ஒரு குவளைபாலோ அன்றிக் காப்பியோ கிடைக்கும்!

பெண் பொம்மையின் தலையில் ஓர் அணா இட்டு விசையை இயங்கச் செய்தால் அது தன் மேலாடையை விலக்கிக் காட்டிவிட்டு மீண்டும் போர்த்திக்கொள்ளும். கண்காட்சியின் முடிவில் இவ்விரண்டின் வருவாயைக் கணக்கிட்டுப் பார்த்ததில் ஆணைவிட பெண் இருபது மடங்கு அதிக வருவாய் பெற்றிருந்தது!"

# சுகமான தூக்கம் வ



தூக்கமின்மைகா லப்போக்கில் பைத்தியமாக்கிவிடும். இவ்வியாதியால் பீடிக்கப் பட்ட சிலர் உறக்கமும் வுழிப்புமற்ற நிலையில் கனவுகள் கண்டு கொண்டே இரவில் அலைந்து உலாவித் திரிவார்கள்! அப்படிச் செய்தது மறுநாள் நினைவிருக்காது. உறக்கமின்மை வியாதிபிடித்த ஒரு பெண் கனவு நிலையில் தன்னை மறந்து எழுந்து உலாவித் திரிவதை இப்படத்தில் காணலாம்.

நல்ல சுகாதாரமான வாழ்க்கைக்கு போதிய நித்திரையும் ஒழுங்காக உணவு சீரணிப்பதும் மிக அத்தியாவசியமாகும். உடலுக்கு உணவிலும் பார்க்க ஓய்வு கொடுக்கும் உறக்கமே மிகப் பிரதானமானது. மிருகங்களைப் பொறுத்த அளவில் நித்திரை இயற்கையானது, பலவந்தமற்றது, குழப்பமற்றது. ஆனால் மனிதர்களுக்கு அப்படியல்ல.

இன்று உலகில் மிகப் பெரும்பாலான மக்கள் தூக்கமின்மை வியாதியால் பீடிக்கப்படுகிறார்கள். இந்த வியாதி மருத்துவத்துறைக்கே ஒருபெரும்பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. வைத்தியசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும் பெருமளவில் தினமும் அதிகரித்துவரும் தூக்க மாத்திரைகளின் விற்பனை, நித்திரையின்மை நோய் எவ்வளவு வேகமாக பரவி வருகிறதென்பதை சுட்டிக்காட்டுகின்றது. சிலர் நித்திரை வேண்டுமென்பதற்காக மாத்திரைகளை உட்கொண்டதால் இறக்கவும் நேரிடுகிறது!

## உறக்கம் உற்சாகம் தரும்.

நித்திரையென்பது பழக்கம் காரணமாகவே ஏற்படுகின்றது என தற்கால மருத்துவ, உளநூல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். உறக்கத்தின் பொழுது சக்திகள் தேங்கி பிறகு உற்சாகமாக உடம்பு செயலாற்றுவதற்கு உபயோகமாகின்றது.

அநேகமானவர்கள் தாம் சிறிதுநேரம்தான் தூங்குவதாகவும், நித்திரையின்மையால் வருந்துவதாகவும் குறைப்படுகின்றனர். ஆனால் ஒருவருக்கு எவ்வளவு நித்திரை தேவையென்பது அவரவர் உடலைப் பொறுத்ததே. பொதுவாக எலோருக்கும் ஒரே அளவான நித்திரை போதும் எனச்சொல்ல முடியாது. ஆனால் குழந்தைகளுக்கும், வயோதிபர்களுக்கும் உறக்கம் அவசியம்.

ஒருவருக்குத் தேவைப்படும் அளவு நித்திரை, மறுநாட் காலை எழும்பும்பொழுது உடலுக்கு போதிய ஓய்வுகொடுத்ததாகவும், புத்துணர்ச்சியூட்டுவதாகவும் இருக்க வேண்டும். ஒருவருக்குத் தேவையான நித்திரையின் அளவைக் குறைப்பது பெரும் முட்டாள்தனமாகும். ஆனால் அதேவேளையில் அதிக நித்திரை கொள்வதும் சுகவாழ்க்கையை கெடுத்துவிடுகிறது; சோம்பலும், உடற்கனமும் ஏற்படும்.

## தூக்கத்தின் விரோதிகள்.

ஒருவருடைய உடல் நிலையில் அல்லது படுக்கைச் சூழ்நிலையில் மாறுதல் ஏற்பட்டால் நித்திரைக்குப் பங்கம் ஏற்படுவதுண்டு. அமைதியான இருண்ட அறையில் படுத்துப்பழகிய ஒருவருக்கு சந்தடியும் வெளிச்சமும் நிறைந்த இடத்தில் தூக்கம் வராது. ஆட்கள் நிறைந்த இடத்தில் உறங்கிப்பழகியவருக்கு வேறிடங்களில் நித்திரை வராது.

உள்ளத்தில் கோபம், வெறுப்பு பழிவாங்கும் நினைப்பு, எரிச்சல் போன்ற உணர்ச்சிகள் தேங்கிக்கிடந்தால் அவை தூக்க நேரத்தில் கிளர்ந்தெழுந்து உறக்கத்தைப் பாழாக்கி விடும் கவலையும் பயமும் கூட தூக்கத்தின் விரோதிகள் பகல் வேளையில் செய்த தவறுகள், அநீதிகள், அல்லது மனதைப் பாதிக்கும் படி நடந்த நிகழ்ச்சிகள் முதலியவற்றால் சிந்தனை இரவில் துன்பமடைந்து, மனச்சாந்தி கெட்டு நல்ல நித்திரைக்கு அத்தியாவசியமான அமைதியான சூழ்நிலை ஏற்படாமல் உறக்கத்துக்குப் பங்கம் ஏற்பட்டுப்போய்விடுகிறது. அதனால் நித்திரைக்குப் போகு முன்னர் மனதில் நல்ல அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

களைப்பு நித்திரையைத்தூண்டி விடும் என்ற நினைப்பில் சிலர் கடைசி நேரம் வரைக்கும் வேலை செய்துவிட்டுப் படுக்கைக்குப் போகிறார்கள். இது தவறு ஏனெனில் அப்படி வேலை செய்வதால் மூளை அந்த வேலையைச் சுற்றிக்கொண்டு அதைப்பற்றிச் சிந்திக்கத் துவங்கிவிடுகின்றது. அதனால் உறக்கம் மறுத்துவிடும்.

## வரப்பிரசாதம்.

ஜீவராசிகளுக்கு அருளப்பட்ட வரப்பிரசாதம்தான் இந்த நித்திரை!— நித்திரையில்லாவிட்டால் ஒருவன் சித்த சுவாதீனமற்றுப் பைத்தியமாகிவிடுவான்! ஒருவன் ஒரு இரவில் எவ்வளவு நேரம் நித்திரை செய்தான்—எவ்வளவு நேரம் உறக்கம் கலைந்து கொண்டு புரண்டான் என்பதைக் கணித்துச் சொல்லிவிட்டால் அது ஆச்சரியம்தான். ஆனால் மருத்துவ விஞ்ஞானிகள் அதை முயற்சித்துப்பார்க்காமலில்லை. நித்திரையை அளவெடுத்தறிய அமெரிக்காவில் நியூயார்க் நகரில் கடந்த 13 ஆண்டுகளாக நித்திரை ஆராய்ச்சி நிறுவனம் என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் இயங்கி வருகின்றது! அங்கே பலவிஞ்ஞானிகளும் நிபுணர்களும். இந்த நித்திரையின் 'மர்மங்'களையும், பிரச்சனைகளையும் இரவு பகலாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். பல

# தூக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகள்

நூற்றுக்கணக்கான ஆண்களையும் பெண்களையும்—உறக்கத்திலிருக்கும்போது இவர்கள் பரிசோதித்துப் பார்த்திருக்கிறார்கள். அலுவலகங்களில் கடமைபுரிவோர் வீட்டுவேலை செய்யும் குடும்பப்பெண்கள், உடலுழைப்பாளிகள், பொலிஸ்காரர்கள், திருமணமானவர்கள் பிரமச்சாரிகள், வயோதிபர்கள் குழந்தைகள், முதலிய பல்வேறு பருவங்கள் துறைகளிலுள்ளவர்களையெல்லாம் உறக்க வேளையில் சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள்.

## நித்திரை மர்மங்கள்,

உறக்கமாக இருக்கும் பொழுது நித்திரையைக் கலைக்காமல், உறங்குபவருக்குத் தெரியாமல், விசேட மின்சாரக் கருவிகளை உடலில் பொருத்தி இருதயத் துடிப்பு, மூளையின் இயக்கம், சூடு, உடலசைவு ஆகியவற்றைப் பதிவு செய்திருக்கின்றனர். இந்தப் பரீட்சையின் போது. ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கும் இரத்த ஓட்டம் கணக்கெடுக்கப்பட்டது. உறக்கத்திலிருக்கும் போது இருதயம் மிக ஆறுதலாக — ஒரு நிமிடத்துக்கு 20 முதல் 30 தடவை அடித்துக்கொள்ளுகிறது; நல்ல நித்திரையிலிருக்கும் சாதாரணமான ஒருவர் ஒரு மணித்தியாலத்துக்கு இரண்டு தடவை அசைந்து படுத்துக் கொள்ளுவார். நித்திரை மயக்கநிலை, இலேசான நித்திரை, ஆழமான நித்திரை, மிக ஆழமான நித்திரை, என ஒருவரின் உறக்கத்தை நாலு பிரிவாக வகுத்து, ஒரு இரவில் அவர் உறங்கிய நேரம் எவ்வளவு என்பதைக் கணித்துவிடமுடிகிறது.

எவ்வகையான பக்டுகை நல்ல நித்திரையை ஏற்படுத்தும் என்பதைப் பரீட்சிக்க இந்த நிலையம் உலகத்து மிகச் சிறந்த வசதியான, சுகாதாரமான படுக்கைகளையெல்லாம் உபயோகிப்பித்துப் பார்த்து மெல்லிய பஞ்சணைகளும் தடித்த படுக்கைகளும் உபயோகிக்கப்பட்டன. 60 கோடி நித்திரைப் பதிவுகளை ஆராய்ந்து பார்த்ததில் சாதாரண ஆழமான உறக்கம் ஆகிய நிலைகளே உடலுக்கேற்ற ஒய்வைக் கொடுக்கும் தன்மையுடையவை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். நல்ல நித்திரையையளிப்பதில் படுக்கைகளும் பெரும் பங்கை வகிக்கின்றன.

## பூக்கடையில் மீன்காரிகள்!

மீன் வியாபாரம் செய்யும் மூன்று பெண்கள் வழக்கம்போல் அடுத்த ஊரிலுள்ள சந்தையில் மீனைவிற்றுவிட்டு, வெறுங் கூடையுடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். பொழுது சாய்ந்து, இருள் வந்து விட்டது. அச் சமயம் பார்த்துப் பெருமழையும் காற்றும் தொடங்கி விட்டன. 'இனி வீட்டுக்குப் போக முடியாது' என்பதையுணர்ந்த மூன்று பெண்களும் பக்கத்திலிருந்த ஒரு கடை ஓரத்தில் ஒதுங்கினர்கள். கடைக்காரனும் மனம் இரங்கி, அவர்களுக்குப் படுக்க இடம் கொடுத்தான்.

அது ஒரு பூக்கடை!

பூக்களின் நறுமணம் மீன்காரிகளின் மூக்கைத்துளைத்தது. அதைச் சகித்துக் கொண்டு அவர்களால் தூங்க முடியவில்லை. கடைசியில் ஒருஉபாயம் செய்தார்கள். தங்களுடைய வெற்று மீன் கூடைகளைத் தூக்கி மூக்கின் சமீபமாக வைத்துக் கொண்டு படுத்தார்கள். அதற்குப் பிறகுதான் அவர்களுக்குத் தூக்கம்வந்தது!

# தூக்கம் வருகிறதா?

மலில்லே. நித்தி
வெடுத்தறிய அ
நியூயார்க் நக
3 ஆண்டுகளாக
ய்ச்சி நிறுவனம்
ஒரு ஸ்தாப
ருகின்றது! அங்
ானிகளும் நிபு
த நித்திரையின்
, பிரச்சனை
பகலாக ஆராய்
க்கிறார்கள். பல

ன் போது. ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கும் இரத்த ஓட்டம் கணக்கெடுக்கப்பட்டது. உறக்கத்திலிருக்கும் போது இருதயம் மிக ஆறுதலாக — ஒரு நிமிடத்துக்கு 20 முதல் 30 தடவை அடித்துக்கொள்ளுகிறது; நல்ல நித்திரையிலிருக்கும் சாதாரணமான ஒருவர் ஒரு மணித்தியாலத்துக்கு இரண்டு தடவை அசைந்து படுத்துக் கொள்ளுவார். நித்திரை மயக்

## த்தைப் பற்றிய ய்ச்சிக் குறிப்புகள்

ான ஆண்களை
ும்—உறக்கத்தி
இவர்கள் பரி
ார்த்திருக்கிறார்
ங்களில் கடமை
டுவேலை செய்
பண்கள், உட
ர், பொலிஸ்கா
ணமானவர்கள்
வயோதிபர்கள்
துதலிய பல்வே
றுறைகளிலுள்ள
ாம் உறக்க வே
செய்து பார்

கறிலே, இலேசான நித்திரை, ஆழமான நித்திரை, மிக ஆழமான நித்திரை என ஒருவரின் உறக்கத்தை நாலு பிரிவாக வகுத்து, ஒரு இரவில் அவர் உறங்கிய நேரம் எவ்வளவு என்பதைக் கணித்துவிடமுடிகிறது.

எவ்வகையான பக்குவத்தை நல்ல நித்திரையை ஏற்படுத்தும் என்பதைப் பரீட்சிக்க இந்த நிலையம் உலகத்து மிகச் சிறந்த வசதியான, சுகாதாரமான படுக்கைகளையெல்லாம் உபயோகிப்பித்துப் பார்த்து மெல்லிய பஞ்சணைகளும் அழுத்த படுக்கைகளும் உபயோகிக்கப்பட்டன. 60 கோடி நித்திரைப் பதிவுகளை ஆராய்ந்து பார்த்ததில் சாதாரண ஆழமான உறக்கம் ஆகிய நிலைகளே உடலுக்கேற்ற ஓய்வைக் கொடுக்கும் தன்மையுடையவை என்ற முடிபுக்கு வந்திருக்கிறார்கள். நல்ல நித்திரையையளிப்பதில் படுக்கைகளும் பெரும் பங்கை வகிக்கின்றன.

## மங்கள்,

ிருக்கும் பொ
யைக் கலைக்கா
பருக்குத் தெரி
மின்சாரக்
ில் பொருத்தி
ப்பு, மூளையின்
உடலசைவு ஆ
ிவு செய்திருக்
ப் பரீட்சையி

## தூக்கத்துக்கு அழைப்பு!

சாதாரண சுகதேகி ஒருவர் எப்படி நல்ல நித்திரையை இரவில் வரவழைக்கலாமென்பதற்கு, 'நித்திரை ஆராய்ச்சி நிறுவன'த்தின் தலைவர். டொக்டர் டீன் பொஸ்ரர் சில ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளார் வெளிச்சம் சத்தம் இரண்டும் உறக்கத்தின் விரோதிகள் என்பதால் அவற்றைத் தவிர்க்க வேண்டும். படுக்கை அறையின் சீதோஷ்ணம் ஆறுதல் தரக்கூடியதாய் உடற்சூட்டிலும் குறைவாக இருக்கவேண்டும். கார் நாற்சந்தியைக் கடப்பதற்கு முன் எப்படி நிறுத்தி ஆறுதலாகச் செலுத்தப் படுகின்றதோ அதேபோல் நாளாந்த கடமைகள் எல்லாம் முடிந்ததும் ஒரு ஆறுதலான சூழ்நிலைக்கு உடலையும் உள்ளத்தையும் ஏற்படுத்த வேண்டும். படிப்படியான கட்டத்துக்குப் பின் ஆழமான உறக்கம் ஏற்படும். தசைநார்களையும் உள்ளத்தையும் நித்திரை செய்வதற்கு முன் ஓயவிடவேண்டும். தசைநார்களும் மனமும் ஒன்றையொன்று தட்டிக் கொடுத்துச் செயல்படும் தன்மையன என்பதால், இலேசாக சிந்தித்தாலும் தசைநார்கள் இயங்கத்துவங்கி அதனால் உறக்கம் கலைந்துவிடும். அதேபோலவே தசைநார் இயங்கினாலும், மூளை சுறுசுறுப்பாக செயல்படத் துவங்கி நித்திரையை ஓட்டிவிடும் நித்திரைக்குமுன் மெல்லிய தேகாப்பியாசம் செய்தால், மகிழ்வான நல்ல தூக்கம் ஏற்படலாம் அல்லது இலேசாக புத்தகம் படித்தாலும் மனம் ஒருமுகப் பட்டு, நல்ல நித்திரைக்கான சூழ்நிலை ஏற்படும்.

## இருதயத்துக்கு ஓய்வு தேவை.

இருதயம்தான் உடலின் பிரதான உள் உறுப்பு அது ஒருவர் விழித்திருக்கும்போது எட்டு மணித்தியாலத்தில் சுமார் 63,894 தடவைகள் அடித்துக் கொள்ளுகின்றது. ஆனால் உறக்கத்திலோ அதற்கும் ஓய்வு கிடைக்கிறது. 8 மணித்தியால த்தியால நேரம் ஒருவர் நல்ல உறக்கத்திலிருந்தாரானல் இருதயம் 50357 தடவைதான் அடிக்கும். தொடர்ந்து இருதயம் பலநாள் செயல்படவேண்டுமானால் அதற்கு நல்ல நித்திரை கொள்வதின் மூலம் ஓய்வுகொடுக்கவேண்டும்.

## கனவு உறக்கத்தைக் கலைக்குமா?

கனவு காண்பதால் நித்திரை கெட்டுவிடுவதாக பலர் நினை

பட்டுக் கொள்வதில் உண்மையில்லை என்பது விஞ்ஞானிகளின் கருத்து. நல்ல உறக்க நிலையில் கனவு ஏற்படாது. உறக்கத்துக்கு முந்திய — விழிப்புக்கும் உறக்கத்துக்கும் இடைப்பட்ட கட்டத்திலேதான் கனவு ஏற்படுகின்றது. தீர்க்கப்படாத பிரச்சினைகள், நிறைவேறுத ஆசைகள், மனோ விகாரங்கள் முதலியன உணர்ச்சிகளைக் கிளறி விட்டு விடுவதால் கனவு ஏற்படும். பொய்யுறக்க நிலையில் கனவு ஏற்பட்டபின் நல்ல உறக்கம் நிகழ்வதால்தான், ஒருவர் கண்ட கனவு அவர் ஞாபகத்திலில்லாமல் போய் விடுகின்றது. கண்ணின் மணிகள் வேகமாக உள்ளே அசைகின்றன. பால் உணர்ச்சிப் போராட்டத்தால் ஏற்படுகின்ற நீண்ட கனவுகள் உடல் உணர்வுகளையும் கிளறி விடுகின்றன. அப்போது இரத்த நாளங்களும் வேகமாக இயங்கத் துவங்கும். அதனுல் அப்படிப்பட்ட கனவுகள் தூக்கமின்மையை ஏற்படுத்தி விடுகின்றன!

## பைத்தியம் பிடிக்கும். எச்சரிக்கை!

தூக்கம் கெடுவதால் உடல் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் மூளை உறுப்புக்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன! பலநாள் அடுத்து தூக்கமில்லாதவர்களுடைய மூளை இயங்க இயலாமல் கெட்டு பைத்திய மாகி விடுகின்றது. அதனுல் நல்ல உறக்கம் மனிதனுக்கு மிக அத்தியாவசியம். நல்ல உறக்கம் கிடைப்பதற்கு, உறங்கப்போகுமுன் சாந்தமும் அன்பும் உள்ள அமைதியான மன நிலையை ஏற்படுத்த வேண்டும். பயங்கர கதைப் புத்தகங்கள் வாசிப்பது அல்லது ஏதாவது வாக்குவாதத்திலீடுபடுவது முதலியவற்றை படுக்கப்போகுமுன் தவிர்க்கவேண்டும். அல்லது அவற்றின் பிரதிபலிப்புகள் மனதில் படிந்து உறுத்தி நித்திரையை விரட்டிவிடும். மூளைக்கு வேலை கொடுக்கக்கூடிய நினைப்புகளைத் தவிர்த்து இனிமையான நினைவுகளைப் படரவிட வேண்டும், வெளியுலகத்துக் கவலைகளையும் பிரச்சனைகளையும் அறவே மறந்து மனதுக்கும் உடலுக்கும் ஓய்வு கொடுக்கவேண்டும். படுக்கையில் படுத்தவுடன் கால்களை நீட்டி மூச்சை ஆழமாக, ஒழுங்காக, ஆறுதலாக உள்ளே இழுத்து வெளியே விட்டுக்கொள்ள வேண்டும்—நல்ல நித்திரைக்கு தூக்க மாத்திரைகளை விழுங்குவதைவிட இந்த முறைகளைக் கடைப்பிடித்தால் பயன் இலகுவாக ஏற்படும்.

— கலா

## டையில் மீன்காரிகள்!

பாபாரம் செய்யும் மூன்று பெண்கள் வழக்
அடுத்த ஊரிலுள்ள சந்தையில் மீனைவிற்று
றுங் கூடையுடன் வீட்டுக்குத் திரும்பிக்
ந்தார்கள். பொழுது சாய்ந்து, இருள்
து. அச் சமயம் பார்த்துப் பெருமழையும்
தாடங்கி விட்டன. 'இனி வீட்டுக்குப் போ
' என்பதையுணர்ந்த மூன்று பெண்களும்
ருந்த ஒரு கடை ஓரத்தில் ஒதுங்கினர்கள்.
ும் மனம் இரங்கி, அவர்களுக்குப் படுக்க
டுத்தான்.

க்கடை!

றுமணம் மீன்காரிகளின் மூக்கைத்துளைத்
ச் சகித்துக் கொண்டு அவர்களால் தூங்க
. கடைசியில் ஒருஉபாயம் செய்தார்கள்.
ய வெற்று மீன் கூடைகளைத் தூக்கி மூக்
ாக வைத்துக் கொண்டு படுத்தார்கள்.
ருதான் அவர்களுக்குத் தூக்கம்வந்தது!

நீதிபதிக்கு முன்னுல்:

## தீப்பெட்டி வாங்கவா போனுர்?

வழக்குப் புத்தகத்தைப் படித்துவிட்டு நிமிர்ந்த மாஜிஸ்திரேட் எதிரிக் கூண்டில் நின்று கொண்டிருந்த வைத்திலிங்கம் என்பவரைப் பார்த்தார். நடுத்தர வயதுடையவர். ஆஜானுபாகுவான தோற்றம். களர்ச்சியான புன்சிரிப்புத் தவழும் முகம். நீளக்காற்சட்டை அணிந்திருந்தார்.

எதிரியின் வளக்கறிஞர்;- எம்மீது வேணுமென்றே பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்கள் ஐயா அவர்களே;

மனுதார் செல்லத்துரையின் வழக்கறிஞர்:- வெளித்தோற்றத்தைப் பார்த்து அவரை மதிப்பிட முடியாது ஐயா! வெளித்தோற்றத்தில் அவர் கனவான். ஆனல் உண்மையில் அவர் ஒரு காடையர்; காமுகர். (சிரிப்பு)

மனுதார் செல்லையாவும் இச்சிரிப்பில் கலந்துகொண்டார். சாதாரணத் தொழிலாளி அவர். வேஷ்டி உடுத்திக் கொண்டு நின்ருர்.

மாஜிஸ்திரேட்:- அவர் என்ன செய்தார்?

மனுதாரின் வழக்கறிஞர்:- எனது கட்சிக்காரரின் மனைவி மிகவும் அழகானவர். இவவயதினர். எனது கட்சிக்காரர் வேலைக்குப் போனதும் எதிரி எமது வீட்டுக்குச் சென்று "தீக்குச்சி என்னிடமுள்ளது; நெருப்புப் பெட்டி தருகிறீர்களா?" என்று கேட்கிருர்.

மாஜிஸ்திரேட்:- அதிலென்ன தவறு? நெருப்புப் பெட்டி இல்லாதவர்கள் அடுத்த வீட்டிற்குப்போய் தீப்பெட்டி கேட்பதில்லையா?

மனுதாரின் வழக்கறிஞர்:- கெட்ட அர்த்தத்தில் அவர் அப்படிக் கேட்கின்றுரையா! (சிரிப்பு)

எதிரியின் வழக்கறிஞர்:- நாங்கள் எந்தக் கெட்ட அர்த்தத்திலும் கேட்கவில்லை ஐயா! மனுதார்தான் எல்லாவற்றையும் சந்தேகக் கண்ணுடன் பார்த்துக் கெட்ட அர்த்தத்தைக் கற்பிக்கின்ருர். அழகிய மனைவியை வைத்திருக்கத் தனக்குத் தகுதியில்லை என்று அவர் எண்ணிக் கொள்கிருர்.

மனுதாரின் வழக்கறிஞர்:- நாங்கள் வீட்டிலில்லாத சமயத்தான் அவருக்குத் தீப்பெட்டி தேவைப்படுகிறதா? (சிரிப்பு)

எதிரியின் வழக்கறிஞர்;- இனிமேல் அவர் வீட்டிலிருக்கும் போதும் நாங்கள் போகிறோம் ஐயா! (பலத்த சிரிப்பு)

மாஜிஸ்திரேட்:- அந்தக் குடும்பத்தைச் சந்தோஷமாக வாழவிடுங்கள். இனிமேல் நீர் மனுதாரின் வீட்டிற்குப் போகவேண்டாம். தீப்பெட்டி தேவையென்றால் இந்துசதத்தைக் கொடுத்துக் கடையில் போய் வாங்கிக் கொள்ளும்.


# புதினம்

## தீபாவளி விசேட இதழ்

- அதிக பக்கங்கள்
- தீபாவளிக் கதையரங்கம்
- தீபாவளிக் கவியரங்கம்
- தீபாவளிச் சேலை அலங்காரம்

மற்றும் பல சிறப்புக்களோடு

வெளிவருகின்றது!

விலை 15 சதம் மட்டுமே!

அதிக பிரதி தேவையான விற்பனையாளர்கள் இப்பொழுதே விண்ணப்பித்துக்கொள்க.

புதினம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## களனிநதி தீரத்திலே... (10)

# கருமுகில்.

**இலட்சியத்தில் தளராத நம்பிக்கையும் அதை நிறைவேற்றத்திடமான மனவுறுதியும் மட்டும் இருந்தால் போதுமா?- சமூகத்தின் அமைப்பும் மனமும் மாறும்வரை தனிமனிதனின் காதல், வாழ்வு, சுதந்திரம் யாவும் சுட்டுப் பொசுங்க வேண்டியதே!**

விழுந்தும்மீசையில்மண் ஒட்டாதபோலிப்பயில்வானின் மனப்பாங்கு போல மனதை ஏற்படுத்திக் கொண்டு பழையபடி கந்தோருக்குப் போய் கதிரைகளில் குந்திவிட்டார்கள் அனைவரும். தலைக்காயம் சரியாகிவிட்டதால் நானும் வேலைக்குப்போகத் துவங்கிவிட்டேன். வேலை நிறுத்த நாட்களில் கவனிக்கப்படாமலிருந்த கடிதங்கள் பைல்கள் மலைபோலக் குவிந்திருந்தன. மூச்சைப் பிடித்துக்கொண்டுமுக்கிமுக்கி அதிக நேரம் யாவரும் வேலை செய்யவேண்டியிருந்தது. வேலை நெருக்கடியால் நானும் நடராசனும் அன்றன்ருடம் சந்தித்துக் கதைக்க இயலாமற் போய் விட்டது.

ஒருநாள் மாலை நேரம் நான் கந்தோர் வேலைகளோடு கட்டி அழுதுகொண்டிருக்கும்போது நடராசன் சூட்கேசுடன் திடீரென என்னிடம் வந்தான்.

“அண்ணை நான் இன்று ஊருக்குப் போகிறேன். உங்கள் வீட்டில் ஏதாவது சொல்லவேண்டுமா?” எனக் கேட்டான்.

“என்ன நடா அப்படி அவசரமாக......” நடராசன் இருந்துவிட்டு இப்படி திடீரெனப் புறப்பட்டது எனக்கு வியப்பாகவே இருந்தது. ‘‘அவசரமொன்றுமில்லை அண்ணை. அம்மாவை ஒருதடவை பார்த்து எல்லாம் முடிவுசெய்துகொண்டு வரவேண்டுமென்றுதான் போகிறேன். அவவைத் திருப்திசெய்துவிட்டால் இம்மாதமே நான் ரோசியை றிஜிஸ்டர் திருமணம் பண்ணி விடுவேன்.’’ என்ருன் புன்முறுவலுடன். ‘‘நல்லது மிக வெற்றியுடன் திரும்பி வர வாழ்த்துகிறேன். நான் நல்லசுகமாயிருப்பதாக என் அம்மாவிடம் சொல்’’ நான் விடை கொடுத்தனுப்பினேன்.

தொடர்ந்து நாட்டின் நாலு திசைகளிலுமிருந்து தினமும் வந்துகொண்டிருந்த செய்திகள் வகுப்பு சௌஜன்யத்தையும் அமைதியையும் விரும்புகின்ற சாதர்ரண மக்களின் அபிலாஷைகளுக்கு வாழ்க்கைக்கு சவால் விடுவது போல அமைந்திருந்தன! நாட்டில் நல்ல அரசியல் சூழ்நிலை நிலவி இருக்கவில்லை. அருவருப்பும் அதிர்ச்சியும் தரும் பிரச்சாரங்களும் நிகழ்ச்சிகளும் அப்போது நிகழ்ந்துகொண்டிருந்தன.

ஊருக்கு நடராசன் சென்று ஒரு வாரமாகியும் அவனிடமிருந்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை. வீட்டுக்குப் போய்விட்டால் மாதக்கணக்காக விடுமுறையில் நின்ருலும், பிற இடங்களில்கூட இருக்கிறவர்களுக்கு கடிதமோ செய்தியோ எழுதும் வழக்கம் தான் (நான் உட்பட) நமது யாழ்ப்பாணத்தவர்களிடமில்லையே! அதனுல் நடராசனிடமிருந்து கடிதம் வராதது எனக்குப்பெரிய ஏமாற்றத்தையோ கவலையையோ ஏற்படுத்தவில்லை!

கந்தோருக்குச் செல்லும்பொழுது அன்று காலைதற்செயலாக ரோசலினுடன் பஸ்ஸில் செல்ல நேரிட்டது. முன்னர் போலவே வணக்கம் சொல்லியபடி அவள் பவ்வியமாக எனக்கருகில் வந்து உட்கார்ந்தாள். எனக்கும் அவள்மீது இப்போது கோபமோ புகைச்சலோ இருக்கவில்லை. கமலாவை மணம் முடிக்கச் சம்மதம் தெரிவித்து அம்மாவுக்குக் கடிதம் எழுதியபின் எந்தநேரமும் என் நினைவில் கமலாவே தோன்றி என் இலட்சியக் கன்னியாக இதயத்து இடத்தை நிறைத்துக்கொண்டிருந்தாள். அதனுல் வேறெந்தப் பெண்மீதும் மனம் கவர்ச்சிகொண்டு அலைந்துகொள்ளவில்லை.

நடாவிடமிருந்து கடிதம் வந்ததா என அவளை வினவினேன். அவள் முகம் திடீரென மாறி சோகம் படிந்து விகாரமாக மாறிவிட்டது.

‘‘நேற்று ஒரு கடிதம் கிடைத்தது. அவர் அம்மா பிடிவாதமாக மறுக்கிருராம். ஆனுலும் தான் எப்படியும் என்னை மணப்பதாகவே எழுதியிருக்கிருர்’’. ரோசலின் கரகரத்த குரலில் சொன்னுள்.

அவள் இறங்கவேண்டியஇடம் சமீபித்துவிடவே, ‘‘நிறைய உங்களிடம் இதுபற்றி ஆலோசிக்க வேண்டும். இன்று மாலை உங்கள் அறைக்கு வருகிறேன்” எனக் கூறிவிட்டு, விடைபெற்றுக்கொண்டாள்.

அன்று எனது அலுவலகத்தில் எனக்கு ஒரு பிரமிப்பான செய்தி காத்திருந்தது. தொழிற்சங்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் எனக்கும் இன்னும் இருவருக்கும் திடீர் இடமாற்ற உத்தரவு அன்று கிடைத்தது! அன்று திகதி 28; அடுத்த முதல் திகதி தொடக்கம் என்னை எனது இலாகாவின் திருகோணமலைக் கிளைக்கு இடமாற்றியிருந்தார்கள்.

வருஷக்கணக்கில் வாழ்ந்து, பல்வேறு நண்பர்களையும் அனுபவங்களையும் பெற்று, காலூன்றுகின்ற வேளையில் கொழும்பை விட்டு திடீரெனப் பிரிய வேண்டி நேரிடுகிறதேயென அறிந்தபோது துக்கமும் அதிர்ச்சியுமாக இருந்தது. அமைதியற்ற அரசியல் சூழ்நிலை நிலவுகிற வேளையில் வேறிடங்களுக்கு இடம் மாற்ருமல் நம்மவர்கள் நிறைந்துள்ள பிரதேசத்துக்கே அனுப்பப்படுகிறேன் என்பதால் மனத்தில் அதிகம் கிலி ஏற்படவில்லை.

அடுத்தடுத்த நாட்களில் பதவியை ஏற்கத் திருகோணமலைக்கு புறப்பட்டுச் செல்லவேண்டுமென்பதால் எனது அறைக்குச் சென்று எனது புத்தகங்கள், முக்கியமான கடிதங்கள் பத்திரிகை நறுக்குகள் முதலியவற்றையெல்லாம் கிளறி எடுத்து ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டிருந்தேன். அப்போது, காலையில் கூறியபடி ரோசலின் என்னைக் காண எனது அறைக்கு வந்தாள்! அவளிடம் எனது இடமாற்ற உத்தரவுபற்றி உடனேயே சொன்னேன்.

‘‘ஆ ‘அப்படியா!’’ என சொல்லிக்கொண்டு அவள் துணுக்குற்று உட்கார்ந்துவிட்டாள்.

நான் பத்திரிகைகளைக் கிளறிக்கொண்டிருப்பதை விட்டு விட்டு, குளியலறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்பினேன்.

‘‘நீங்கள் அதிர்ஷ்டக்காரர் தான்’’ என ரோசலின் சொன்னுள்.

‘‘ஏன் அப்படி சொல்கிருய் ரோசலின்?”

‘‘வேறென்றுமில்லை, இந்த இடமாற்ற உத்தரவு நடாவுக்கும் வந்திருந்தால் பலபிரச்னைகள்தீர அவருக்கு வழிஏற்படும்.என்னைத்தான்மணப்பதுஎன்ற பிடிவாதத்தைத் தளர்த்திக்கொள்ளக் கூட முடியும்’’ ரோசலின் வாயிலிருந்து வந்தவார்த்தைகள் எனக்கு வியப்பாக—எங்கோ கோளாறு நேர்ந்துவிட்டதாக உணர்த்தின. நடராசன் இத்தனை கற்பனைகளையும் வெறும் ஒரு தலைக்காதலினுல்தான் எழுப்பிவிட்டுக் கொண்டு அலைகிருனே என்ற சந்தேகம் என்னுள் எழுந்தது!

‘‘ரோசலின்! அப்படியானுல் நீ அவனை மணந்துகொள்ளப் பின் வாங்குகிருயா?’’ நான் வெளிப்படையாகவே கேட்டேன் — என்னுள் உறுத்திய சந்தேகத்தை நிவர்த்தி செய்ய.

அவள் விழிகளைக் குத்தி என்னை நோக்கினுள்—அவைகளிலிருந்து பொல பொல என கண்ணீர்வடியத் தொடங்கிவிட்டது!.

‘‘உங்களுக்கு பெண்களின் உள்ளம் கொஞ்சமும் தெரியாது. எப்போதும் எதிலும் சந்தேகப்படுகிறீர்களே!’’ விம்மி விம்மிச் சொன்னுள்.

பாவம்! நான் விடுத்த வினுகணையாக அவள் பட்டு இதயத்தை ஊடுருவி தாக்கிவிட்டதாக்கும்!

எனது உள்ளம் கல்லல்ல—ஆனுலும் என்ன வார்த்தை சொல்லி அவளைத் தேற்றி அழாமல் நிறுத்துவிப்பது?—அவள் அழுது ஓயும் வரை நானும் தலை கவிழ்ந்தபடி மௌனமாகவே இருந்தேன்,

“தயவு செய்து தப்பாக வழக்கம்போல் நினைக்காதீர்கள் — நான் நடாவை என் உயிர்க்குயிராக இப்போது காதலிக்கின்றேன்—அவரை திருமணம் செய்துகொள்வதையும் விரும்புகிறேன். ஆனுல்......’’ அவள் தொண்டையுள் சோகம் நைந்து போய் குரல் இழை போல வெளி வெளிப்பட்டது.

‘‘ஆனுல் பாவம் என்னை மணந்து கொண்டால் நடாவுக்கு எத்தனை கஷ்டமேற்படும்? தாய் பிடிவாதமாகமறுக்கிருவாம்.அவவை மீறி மணந்துகொண்டாலும், நான் வேறு இனத்தவள்; நடா வேறு இனத்தவர். ஒட்டுறவு ஏற்பட விடாமல் வெட்டி விழ்த்துவது போல நிகழ்ச்சிகள் நடக்கின்றனவே—இப்படி ஏற்படுமென முன்பு நான் எதிர்பார்க்கவில்லை. வெறியர்கள் விடுவார்களா நாங்கள் கூடி வாழ்வதற்கு?’’-அவள் ஒரு மூச்சில் தன் மனதில் குமுறிக்கொண்டிருந்தவற்றைக் கொட்டி விட்டு, நான் கூறப்போகும் தீர்ப்பை எதிர்பார்த்து எனது முகத்தைப் பார்த்தாள்.

“அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்து விடாதே ரோசலின். நடா வந்தபின் நிறைய ஆலோசிப்போம். பெரிய கஷ்டம் எதுவும் வந்து விடாது. வீணுகத்துக்கப்படவேண்டாம்’’ அவளைச் சமாளித்து தேற்றுவதற்காக நான் அப்படிச் சொன்னுலும், என் அடி மனதுக்குள் அவள் சொல்வதில் ஓரளவு நியாயமிருப்பது போலப்படாமலில்லை.

‘‘பாவம், நடா. அவர் கஷ்டப்படாமலிருப்பதற்காக, என்னுல் நினைக்கமுடியாவிட்டாலும், கூட காதலைத் தியாகம் செய்யவும் தயார்! அவருக்கு எவ்வித துன்பமும் வரக்கூடாது. அது என்னுல் வரக்கூடாது! என்னை மணப்பதால் வரக்கூடாது!...... எனக்குப் பயமாக இருக்கிறது. என்னை மணந்தால், நடா வேறு இனத்த

[11-ம் பக்கம்பார்க்க]

‘ஈழத்துச் சோமு’

# ‘கூ…கூ…என்று குயில் கூவுகிறது’

## அதற்கு எத்தனை அர்த்தம்!

சோலைகளிலிருந்து "குக்கூ......கூ......குக்கூ" எனக் குரல் வந்தால் நாம் வசந்தம் பிறந்து விட்டதென, தெரிந்துகொள்கிறோம். நம் வீட்டுக் குழந்தைகளும் திருப்பிக் 'குக்கூ' எனக் குரல் எழுப்பி மகிழ்ந்து கொள்வார்கள்—ஆனால்..........?

மேல் நாடுகள் பலவற்றில் குயில் கூவுவதனால் பல்வேறு நிகழ்ச்சிகள் சம்பவிக்குமென அந்நாட்டு மக்கள் நம்புகிறார்கள்! இந்த நம்பிக்கைகள் இன்னமும் இருந்துவருகின்றன!

செக்கோஸ்லாவேக்கியக் கிராமப் பெண்கள் தமக்குப்பிறக்கப்போகும் பிள்ளைகளின் தொகையை குயில் கூவும் எண்ணிக்கையைக் கொண்டு தெரிந்து கொள்கிறார்கள்.

போர்த்துக்கலில், குயிலின் குரலிலிருந்து ஒரு இளம் பெண் எவ்வளவு காலத்துக்குத் திருமணமாகாமல் இருப்பாள் என்பதையறிகிறார்கள்.

யோர்க்ஷையரில் ஒருவர் எவ்வளவு ஆயுட் பலமுள்ளவராயிருப்பாரென்பதையும் குயிலின் குரல்கள் நிர்ணயித்து விடுகின்றன.

குயில் பற்றி இன்னும் பல நம்பிக்கைகளும் நிலவுகின்றன; அவை சுவையானவை.

குயிலின் வலக்காலின் கீழ் கிள்ளப்படும் மண், தெள்ளுப் பூச்சியை விரட்டும் சக்தியுள்ளதாக உரோமர்கள் நம்பினர். வட ஸ்கொட்லாண்டிலும் அயர்லாந்திலும் வாலிபர்கள் குயில் கூவும்பொழுது தமது குதியை நிலத்தில் பதித்து மூன்று தடவை சுற்றினால், ஏற்படும் அந்தக் குழியில் காணப்படும் மயிரின் நிறம், அவர்களது எதிர்கால மனைவிமாரின் கேசத்தின் நிறத்தை ஒத்திருக்குமென நம்புகிறார்கள்!

பசியாயிருக்கும் போது, குயிலின் குரல் காதில் விழுவதால் துரதிர்ஷ்டம் ஏற்படுகிறதென ஸ்கொட்லந்து மக்கள் நம்புகின்றனர்.

வேல்ஸ் நாட்டில் பருவகாலத்தில் முதற் குயில் கூவும்பொழுது பிறக்கும் குழந்தைகள் வாழ்க்கை முழுவதும் அதிர்ஷ்டம் நிறைந்தவராயிருப்பார்களெனக் கருதப்படுகிறது. ஜெர்மனியிலும் சமர்செட் தேசத்திலும் வசந்தத்தின் முதற் குயில் குரலைக் கேட்டதும் ஓடோடிச் சென்றுமுகத்தைக்கழுவிக் கொள்ளுகிறார்கள் — அல்லது முகத்தில் தீப்புண்களும் வடுக்களும் ஏற்பட்டுவிடுமென்று நினைக்கிறார்கள்.

குயிலின் குரல் வருகிற திசையைக் கொண்டும் லாப நஷ்டத்தைக் கணக்கெடுக்கிறார்கள். கிழக்கு இங்கிலாந்து, அயர்லாந்து ஜெர்மன் நாட்டு மக்கள் இடப்பக்கத்திலிருந்து குரல் கேட்டால் பீடை என்றும், வலப்பக்கம் என்றால் சுபீட்சம் என்றும், வடக்கிலிருந்து வந்தால் வறுமையென்றும், தெற்கென்றால் சந்தோஷமென்றும் நம்புகிறார்கள்.




சாதியை ஒழிப்பதில்

# ஈ. வே. ராவுக்கும் எனக்கும் இம்மியளவுவேறுபாடும்இல்லை

## குன்றக்குடி அடிகளார் பேச்சு.

சாதியை வளர்க்கும் ஒரு நிறுவனத்தின் தலைவன்என்று என்னைக் கருதுகிறார்கள்; இந்த எண்ணத்தை மாற்ற நான் விரும்புகிறேன். சாதியை ஒழிப்பதில் தந்தை பெரியாருக்கும் எனக்கும் இம்மியளவும் வேறுபாடில்லை. ஆனால் சாதியை ஒழிக்கும் முறையில் தான் வேறுபடுகிறோம். சாதிக்கும் சமயத்திற்கும் சம்பந்தமில்லை. சில ஆதிக்கக்காரர்கள் – மக்களைச் சுரண்டிச் சுகவாழ்வு வாழும் நோக்கமுடையவர்கள் தான் சாதியை உண்டாக்கினார்கள். சாதி முறைகள் உண்டாக்கப்பட்டபோது, மூன்றுபேர் ஒரு சாதியாகவும் மற்ற 97 பேர் 97 சாதியாகவும் தான் அமைக்கப்பெற்றனர். ஆனால் அந்தச் சாதிப் பிரிவுக்குக் காரணமானவர்கள் மக்களின் கடவுள் நம்பிக்கையையும், சமயத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது உண்மைதான். சாதி முறை, ஒழுக்கம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையாக வளரவில்லை-மாறான, சுரண்டல் முறையில் தான் வளர்ந்திருக்கிறது. எனவே, இதைப்பற்றி நன்றாகப் பகுத்துணர வேண்டும்

உயர்ந்த சாதியினர் தாழ்ந்த சாதியினர் எனப்பெறுவோர் கொண்டு வந்து கொடுக்கும் தண்ணீரை வாங்கிக்கொள்ள மறுப்பார்கள்; ஆனால் இதே தாழ்ந்த சாதியினர் பால், வெண்ணெ, நெய் முதலிய விலையுயர்ந்த பொருட்களைக் கொடுத்தால் மறுப்பதில்லை. அவை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றன. தாழ்ந்த சாதியினரின் சட்டி பானைகளை உயர்ந்த சாதியினர் என்போர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆனால், வெண்கலம், வெள்ளி, தங்கம் முதலிய விலையுயர்ந்த உலோகங்களால் செய்யப்பெற்ற பாத்திரங்களை மறுக்காமல் ஏற்றுக்கொள்வார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? பொருள்வழியாக வரும் சாதியை உயர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது தானே? எனவே இதில் வேறெதுவும் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

நான் அருள்நெறி மாநாட்டோடு சாதி ஒழிப்பு மாநாடும் நடத்த எண்ணியுள்ளேன் தமிழர்கள் ஒற்றுமையோடும், இனமானத்தோடும் வாழவேண்டும். நம்மிடத்தில் ஒற்றுமை இல்லாததால்தான் அடுத்தவன் நம்மைப் பார்த்து நகைக்கிறான். இந்நிலை மாற வேண்டாமா?

[சென்னை த. தே. க. மாநாட்டில் குன்றக்குடி அடிகளார் பேசியது.]

### மலாயாவை அடுத்துள்ள தீவில் வாழும்

# ராட்சசப் பல்லிகள்!

## பயங்கரமும் விசித்திரமுமான பிராணி.

மலாயாவை அடுத்துள்ள தீவுத் தொகுதிகளில் கீழ்ச் சுண்டா என்ற பகுதியில் சாம்பவா, ப்ளோர்ஸ் என்ற பிரதேசங்களுக்கு இடையில் இருபது மைல் நீளம், 12 மைல் அகலமுள்ள கொமோடோ என்ற தீவு ஒன்று இருக்கிறது. 1912 ஆம் ஆண்டு, ஒரு விமானி விமானத்திலிருந்து அந்தத் தீவில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது அங்கு ஒரு பிரமாண்டமான பல்லியைக் கண்டார். அந்தத் தீவில் அப்பொழுது சில கைதிகள் மட்டுமே இருந்தார்கள். சாம்பவா அரசரின் உத்தரவுப்படி அவர்களை அந்தத் தீவில் வைத்திருந்தார்கள். சில நாள் அங்கு தங்கியிருந்துவிட்டுத் திரும்பிவந்த அந்த விமானி, "பிரம்மாண்டமான டிரேகன்—பல்லிகளை அங்கே பார்த்தேன்; ஒவ்வொன்றும் 12 அடிநீளமாவது இருக்கும் அங்கே வசிப்பவர்களை விசாரித்ததில் அந்தப் பல்லிகள் பன்றி, ஆடு, மான் முதலிய பிராணிகளைப் பிடித்துத் தின்னும் என்று தெரிந்தது. குதிரைகளைக் கூட அவை தாக்குமாம்" என்று சொன்னார். அவர் சொன்னதை யாருமே நம்பவில்லை. பூய்டென்யோர்க் தாவரநிலைய அதிகாரியாக இருந்த மேஜர் வென்ஸ் என்பவர் கொஞ்ச நாளையில், இந்தமாதிரி ராட்சசப் பல்லிகள் இருப்பது உண்மைதான் என்று தெரிவித்தார்.

ப்ளோர்ஸ் அரசாங்க நிர்வாகத்தைக் கவனித்து வந்த ஹான்ஸ் பிரெக் என்பவர் உத்தியோக அலுவலாகக் கோமோடோவுக்குப் போயிருந்தபோது அங்கே முத்துக்குளிக்கும் இலாகாவைச் சேர்ந்த கொக், ஆல்டிகான் என்ற இரண்டு மீன்பிடியாளர்கள், "இந்தப் பல்லிகளில் சில இருபது அடி நீளத்துக்குக்கூட இருக்கும்" என்றார்கள். "இப்படிப் பல பல்லிகளை நான் கொன்றிருக்கிறேன்" என்று பெருமையடித்துக் கொண்டான் ஆல்டிகான்!

ப்ளோர்ஸின் கிழக்கு முனையிலுள்ள ரிண்ட்ஜா, பாதர் என்ற சிறு தீவுகளில்கூட இந்தமாதிரி பிரமாண்டமான பல்லிகள் வசித்து வந்ததாகத் தெரிகிறது. 1840—ஆம் ஆண்டு வெளியான ஒரு குறிப்பிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது. சாம்பவா அரசர் அப்போது இந்தப் பிரமாண்டமான பல்லி இன்னும் அழிந்துவிடாதபடி தகுந்த பாதுகாப்பு ஏற்பாடெல்லாம் செய்திருந்தாராம்.

கோமோடோ ராட்சசப் பல்லி பார்வைக்கு முதலையைப் போலவே தோற்றமளிக்கிறது. ஐந்து அல்லது ஆறு அடி நீளமுள்ள முதலைகளைச் சர்வசாதாரணமாகக் காணலாம். ஆனால் பத்து ஆண்டுகள் அவை வாழும்படி விட்டு வைத்தால், பத்து அடி நீளங்கூட அவை வளர்ச்சியடையும் 'காவியேல்' என்ற ஒருவகை இனத்தைச் சேர்ந்த முதலை இருபது அடி நீளங்கூட வளர்ச்சியடையுமாம்! ஆனால், கோமோடோ ராட்சசப் பல்லிகள், பத்திலிருந்து பதினைந்தடி நீளத்துக்கு வளரக் கூடியவை. அதன் எடை, நூற்றிஇருபதிலிருந்து இருநூறு ராத்தலுக்குள் இருக்கும்!

நகைச்சுவைக் கட்டுரை:

# 'செனட்டர் பதவி': புலம்பல்

~~~~~~~மாஸ்டர் சிவலிங்கம்~~~~~~~

ஐயகோ! ஆண்டவனே!! இந்த நாட்களில் என்னால் வெளியில் தலைகாட்டவே முடியவில்லையே. எங்கு திரும்பினாலும் என்னைப்பற்றித்தான் குசுகுசுக்கிறார்கள். பழுத்த அரசியல் வாதி முதல் பழம் விற்கும் பாட்டிவரை எனது பிரச்சனைதான் பேசப்படுகிறது. பத்திரிகைகளெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு எனது பெயரைக் கொட்டை எழுத்துக்களிலே பிரசுரிக்கின்றன. நேற்று ஒரு தலைவர் என்னைப் பற்றி அறிக்கை விட்டால், இன்று வேறொரு தலைவர் அதை மறுத்து — எதிர்த்து அறிக்கை விடுகிறார். நான் என்பாட்டில் 'சிவனே!' என்று சும்மா இருக்க, சிலர் எனது பெயரைச் சொல்லி தங்கள் மண்டைகளை உடைத்துக்கொள்ளப் பார்க்கிறார்களே, என்பதை எண்ணும்போது, யாருக்கும்தான் தெரியாமல் 'அங்கொடை'க்குச் சென்று அப்பாடா' என்று இருந்துவிடலாமா? என்று கூடத் தோன்றுகிறது.

என்னைப் பற்றி எனக்கே இல்லாத அக்கறை இவர்களுக்கெல்லாம் ஏன் வேண்டிக்கிடக்கிறது? என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அன்னியோன்னியமாய்த் திரிந்த நண்பர்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதம்; சில கட்சிகளுக்குள்ளேயே குத்துவெட்டு......இவற்றிற்கெல்லாம் என்ன காரணம் ..........? எமது குறிக்கோள் பதவி அல்ல. எமக்குப் பதவி ஆசை துளிகூடக் கிடையாது'' என்று பகிரங்க மேடைகளில் முழங்கிய பலருக்கு 'என்னை' அடையவேண்டுமென்ற பேராசை பிடித்திருப்பதுதான் முழுக்க முழுக்க காரணம்.

பிரதமருக்கும், சர்வ கட்சி மேலிடங்களுக்கும் தினசரி பல்லாயிரக் கணக்கில் பதிவுத் தபால்களும், தந்திகளும் பறந்துகொண்டிருப்பதாகப் பலர் பேசிக்கொள்கிறார்கள். சில 'பெரிய' மனிதர்கள் ஐம்பது நூறு என்று பணம் செலவு செய்து மற்றவர்கள் மூலம் தங்களுக்கான சிபார்சுத் தந்திகள் அனுப்புகிறார்கள்என்ற அந்தரங்கச் செய்தியும் எனது காதுகளில் விழாமலில்லை. எனக்காக எவ்வளவு பெரிய தியாகமெல்லாம் செய்கிறார்கள்! அவர்கள் தியாகம் அடியோடு வாழ்க!

ஒரு சில பேர்வழிகள்—மன்னிக்கவும் பிரமுகர்கள் சில சங்கங்களையும் சபைகளையும் தங்களின் சுயநலத்திற்காக பாவிப்பதைப் பார்க்கும்போது எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வருகிறது. இருந்தாலும் நாம் என்ன செய்ய முடியும்? நமக்கேன் இந்த வம்பு? என்றிருக்கும் என்னைப் பிடிப்பதற்குத்தான் எத்தனை தில்லுமுல்லுக்களைக் கையாளுகின்றனர். தங்கள் சபைமூலம் கோரிக்கை அனுப்புவதோடு திருப்தியடைவதாகத் தெரியவில்லை. என்னை அடைய முயற்சிக்கும் சில சபைப் பிரமுகர்கள் தங்கள் செலவில் சங்க அங்கத்தவர்களை அழைத்துக் கொண்டு கொழும்பிற்கு அடிக்கடி போவதும் வருவதுமாக இருக்கிறார்கள். அட! தெய்வமே!! மனிதனைப் படைத்து பதவிப் பித்தையுமல்லவா படைத்துவிட்டாய்?

இதுகாலவரையில் பெயரளவில் சங்கங்களாக இருந்து உருப்படியாக எதுவும் செய்யாது கும்பகர்ணத் தூக்கம் போட்டுக்கொண்டிருந்த சில இயக்கங்கள், 'என்' விஜயத்தில் திடீரென்று விழித்துக்கொண்டு மற்றவர்கள் தூண்டுதலின் பேரில் 'அவரை நியமிக்கவும். இவரை நியமிக்கவும், அந்தப் பகுதி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவும், இந்தப் பகுதி .....என்றெல்லாம் தந்திகளை அனுப்பிக்கொண்டிருக்கின்றன. மேற்படி சங்கங்களின் செயல் பலருக்குச் சங்கடமாயிருப்பதாகக் கேள்வி.

புதிதாக என்னை அடைவதற்குப் பலர் குத்துக்கரணம் போடும் இந்த நேரத்தில், முன்பு என்னை அனுபவித்த சிலரும் 'மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காது' என்பதற்கொப்ப என்னை மீண்டும் அடைவதற்குத் தலைகீழாக நிற்கிறார்களாம்.

பெண் பிரதமர் சில பெண்களிடமும் என்னை ஒப்படைப்பாரென்று பலர் பேசிக்கொள்கிறார்கள். 'காட்டிக்கொடுக்கும் கயமைத்தனம்' கொண்ட சிலரும் என்னை அடைய முயற்சிப்பதை எண்ணும்போதுதான் எனக்குத் தாங்க முடியாத தலையிடி ஏற்படுகிறது. ஒன்றுமட்டும் நிச்சயத்திலும் நிச்சயம். செனட்டர்த் தேர்வோடு எனக்குத் தலையிடி போய்விடும், ஆனால் என்னை அடைய முயலும் பலருக்கு அத்தேர்வுக்குப் பிறகுதான் பெரும் தலையிடி ஏற்படும் என்பது ஆயிரத்திலொரு வார்த்தை.

## காதலித்துக் கொண்டே இருந்தால் போதுமா?

### சீனன் வாடி சிங்கள ஆசிரியை விமானப்படை வீரர் காதல்

சீனன்வாடிச் சிங்களப் பாடசாலையில் படிப்பிக்கும் ஒரு ஆசிரியையை, ஒருநாள் நள்ளிரவு 2 மணிக்கு அவரது வீட்டில் காணவில்லை. வீட்டிலுள்ளவர்கள் மிகுந்த கலக்கத்துடன் அயலிலுள்ள உறவினரின் உதவியோடு மேற்படி ஆசிரியையைத் தேட ஆரம்பித்தனர். உறவினரில் ஒருவருக்கு ஏற்கெனவே இப்பெண்மீது சந்தேகம். அந்த நள்ளிரவில் பாடசாலைக் கட்டிடத்துள் சென்று பார்த்தபோது அவருடைய சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று! அங்கேஅந்த ஆசிரியையும் அவருடைய காதலரான இலங்கை ரோயல் விமானப்படை வீரர் பெர்ணாண்டோவும் உல்லாசமாக இருக்கக் காணப்பட்டனர்.


காதல், வெறும் காதலாகவே கழிந்து போவதை விரும்பாத பெண்ணின் உறவினர், அவர்கள் இருவரையும் சீனன்வாடிப் பொலீசில் ஒப்படைத்து பதிவுத் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து முடித்தனராம்!

இச்சம்பவம் சமீபத்தில் சீனன்வாடியில் நடைபெற்றதாக எமது கிண்ணியா நிருபர் எழுதுகிறார்.

## குடியேற்றப் பகுதிகளில் விலைமாதர் தொல்லை

திருகோணமலைப் பகுதியில் காடாகக் கிடந்த கன்னியா விலக்கு என்னுமிடத்தை குடியேற்றத் திட்டத்தின் கீழ் திருத்தி அரசாங்கம் சனங்களைக் குடியேற்றியுள்ளது. இப்பகுதியில் குடியேறியவர்களில்வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பல விலைமாதர்களும் இருக்கிறார்கள். இவர்கள் பூசி மினுக்கிக்கொண்டு வெளியே உலாவி பேரம்பேசி தங்கள் வியாபாரத்தை பெருமளவில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். திருகோணமலையிலும், அயற் கிராமங்களிலுமுள்ளவர்களுக்கு இந்த பெண்களால் தொல்லைகள் அதிகரித்து வருவதாகவும், அதனால் குடியேற்றத் திட்ட அதிகாரிகளும் பொலிசும் இப்பெண்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமென மக்கள் வற்புறுத்த தொடங்கியிருப்பதாகவும்'புதினம்' நிருபர் தெரிவிக்கிறார்.

''விபசாரத்தையும் பெண்களால் ஏற்படும் நோயையும் பரப்புவதில் குடியேற்றத் திட்டங்களிலுள்ளவர்கள் முக்கிய காரணமாக இருக்கிறார்கள்'' இவ்வாறு மேகநோய் தடுப்பு இயக்க இலாகாவினர் சென்ற ஆண்டு பூராவும் நடாத்திய ஆராய்ச்சியின் முடிபாக வெளியிட்டுள்ள தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



இலங்கையின் சிறந்த புகைப்படக் கலைஞர்களில் ஒருவரும் 'திரைக்கலை' பத்திரிகையின் வெளியீட்டு ஆசிரியரும், கொழும்பு சினிமாஸ் லிமிடெட்டைச் சேர்ந்தவருமான செல்வன் கிங்ஸ்லி செல்லையாவுக்கும், செல்வி வி கே. ராஜலட்சுமிக்கும் சமீபத்தில் சிறப்பாகத்திருமணம் நடைபெற்றது.

## விளங்காதமொழிக் கடிதம் திரும்பிச் சென்றது!

கொழும்பு பார்சல் தாபால் நிலையத்திலிருந்து 'ஒரு பார்சல் சம்பந்தமான கடிதம்' ஒன்று ''மனேஜர், கலைமதி மன்றம் அன் நூலகம், சம்மாந்துறை'' என்ற முகவரிக்குக் கிடைத்தது. அதை அந்த மன்ற அதிகாரிகள் பார்வையிட்டபோது சிங்களம், ஆங்கிலம், இரண்டைத் தவிர வேறுமொழி (தமிழ்) எதுவும் அதில் காணப்படவில்லை. விபரம் தெரியாத அவர்கள் தமிழில் விபரங்கள் அனுப்பக்கோரிஉடன் திருப்பியனுப்பி விட்டனர்!

## உடைகளிலும் குளிர் சாதனம்!

நியூயோர்க் நகரத்தில், பாதசாரிகள் தாங்க முடியாத உஷ்ணத்தைச் சமாளிப்பதற்கு உதவும் விதத்தில் ஒருவித புது அங்கியைத் தயாரித்துள்ளனர்.

• பல கம்பெனிகளின் அதிபரும், ஒரு பிராந்திய எஞ்சினியருமான விர் ஜில்ஸ் டார்க் என்பவர்தான் இதனைத் தயாரித்து வருகின்றார். தோள் பட்டையில் ஐஸ் வைத்துக்கொள்ள இந்த உடையில் ஒரு பாகம் அமைந்துள்ளது.
~~~~~~~

## களனி நதி தீரத்திலே ... ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

வரென்பதால் நம்மவர்கள் நாடிருக்கும் சூழ்நிலையில் நடாவுக்கு தீங்கிழைத்து விடுவார்கள். நடா பாவம்!'' அவள் ஏதோ வெறிபிடித்தவள் போல உணர்ச்சிவசப்பட்டு ஒரே மூச்சாகப் பேசிவிட்டு ஓய்ந்தாள்.

நேரம் இருட்டி விட்டதால், மேலும் அவளுக்குப் பேச்சுக்கொடுக்காமல், சமாதானஞ் சொல்லி அனுப்பிவிட்டேன்.

அம்மாவுக்கும், நடராசனுக்கும் என் இடமாற்றம் பற்றி கடிதங்கள் எழுதிவிட்டுப் படுத்துவிட்டேன். அன்றிரவு பூராவும் தூக்கம் வரவில்லை. றோசி சொல்லியவைகள் காதில் எதிரொலித்தபடியிருந்தன. நடாவின் எதிர்காலமென்ன?—என் புதிய இடம் எப்படி இருக்கும்?—என மாறி மாறிக் கற்பனை செய்து கொண்டு படுக்கையில் கிடந்தபடி புரண்டேன். பின்னிரவில் நித்திரையாகிவிட்டேன்.

நான் திருகோணமலைக்குச் செல்லுமுன் நடராசன் வந்து விட்டால் பயணம் சொல்லிக் கொண்டு புறப்படலாமே என ஏங்கித் துக்கப்பட்டுக்கொண்டிருந்தேன். இருபது வருடங்களுக்கதிகமாக ஒன்றாக வளர்ந்து, கூட வாழ்ந்த பாசம் அவனை விட்டு விட்டுப் பிரிந்து செல்கிறேனே என மனதை வதைத்தது ஆனால் பயணத் தினத்தன்று காலை நடராசன் ஊரிலிருந்து வந்துவிட்டான். எனதறைக்கு வரும்பொழுதே'' அண்ணை! உங்களுக்கு இட மாற்றமாம். றோசி சொன்னாள். வந்தவுடன் ஓடோடி வந்தேன். என்ன திடீரென்று ......? நீங்கள் ஆட்சேபிக்கவில்லையா?'' எனப்பரபரப்புடன் கேள்விமேல் கேள்வியாக கேட்டான்.

''நடா; துக்கப்படஒன்றுமில்லை. இதை ஆட்சேபிக்கவும் இயலாது; தண்டனை இடமாற்றம் திருகோணமலைக்குத்தானே போகிறேன். அதனால் பயப்பட வேண்டியதில்லை'' என அவனை ஆறுதல் படுத்தினேன்.

அவன் முகம் பேயறைந்ததுபோல வாடிப்போய் வெறிச்சென்று இருந்தது. கதையைவேறு திசைக்குத் திருப்புவதற்காகக் கேட்டேன்; ''இராத்திரி றெயிலில்கூட்டமா? நித்திரை கொள்ளவில்லையா?—ஊரில் மழைதண்ணி, புதினங்களென்ன?''

''ஊரில் எல்லாரும் சுகமாயிருக்கினம். உங்கள் அம்மா உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி உங்களிடம் சொல்லச் சொன்னா. லீவு கிடைக்கிறபொழுது கெதியாக ஊருக்கு வந்து போகட்டாம்...... உங்களின் அவவைக்கூட நானும் கண்டேன். அண்ணாவுக்கு ஏற்ற சோடிதான்!'' நடராசன் சொல்லிக் கொண்டே என் முகத்தைப் பார்த்தான். என் முகத்தில் ஆவலும் மகிழ்வும் நிலவிக் கொண்டிருந்தது 'அவளை'ப்பற்றி அவன் குறிப்பிடும் போது!

''நடா! எனது திருமணத்தை அடுத்து உனது திருமணமும் நடக்கும்தானே?... உன் அம்மா என்ன சொன்னா?'' நான் கேட்டேன்.

''நடராசன் ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

''இன்னும் கொஞ்ச நாட்களுக்கு பொறுக்கவேண்டும் அண்ணை. அம்மா மறுக்கிறா. நாட்கள் போக அவவைச் சமாளித்து விடலாம்.'' துக்கமான குரலில் அவன் சொன்னாலும், இன்னமும் நம்பிக்கையிருப்பது போல உறுதியாகப் பேசினான்.

''சமூகத்தின் பழைய நம்பிக்கைகளையும், ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் மீறுவதற்கு முதலில் பயமாகத்தானே இருக்கும்? அதிலேயே பிறந்து வளர்ந்து ஊறிப்போன படியால், அம்மா உடன்பட மறுக்கிறா. சமூக கட்டுப்பாடுகளென்பது ஒரே இரவில் கோடாலி கொண்டு பெயர்த்து விடக்கூடிய இலேசான மரமல்லவே—நூற்றாண்டுக் கணக்காக வேர்பரப்பி நிற்கிற பெரு விருட்சம்தானே?''

இன்னமும் நடராசனிடமிருந்த துணிவையும் நம்பிக்கையையும் பார்த்தபோது, உண்மையிலேயே எனக்கு அவன்மீது மிகவும் இரக்கமாக இருந்தது. அவன் அப்படித்தான் பிடிவாதக்காரன்; அசாத்தியத் துணிச்சல் காரன்!

காலம்போக, பொறுத்து ஆறுதலாக திருமணம் செய்யலாமென்ற முடிபுக்கு அவன் வந்திருப்பதையறிந்து எனது மனம் ஆறுதலடைந்தது. அல்லது அவன் திடீர் திடீரென ஏதாவது செய்து எக்கச்சக்கமாக தன் எதிர்காலத்தை அமைத்துக் கொண்டு விடுவானே?

கந்தோருக்குச்செல்லும் போதும் நிறைய அன்று அவனுக்கு ஆலோசனைகளும் புத்திமதிகளும் கூறினேன்.


அன்று மாலை எங்கள் கந்தோரில் எனக்குப் பிரியாவிடை விருந்து எல்லாம் முடிந்து திருகோணமலைக்குப் புகைவண்டி ஏறும்போது நடராசனை மீண்டும் சந்தித்தேன். றோசியும் புகைவண்டி நிலையத்துக்கு வந்திருந்தாள்.

நாட்டுநிலமை சீராக இல்லாததால் மிக எச்சரிக்கையாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டுமெனவும், திருமணம்பற்றித் திடீர்நடவடிக்கையிலிறங்கவேண்டாமென்றும் நடாவிடம் தெரிவித்தேன்.

புகைவண்டி புறப்பட்டபொழுது என் கண்கள் கலங்கிவிட்டன — நடாவையும் நான் வசித்த கொழும்பையும் விட்டுப் பிரியும் வேதனைத் துடிப்பு என் கண்களைக் குளமாக்கிவிட்டன!—நடாவின் கண்களிலும் நீர் துளிர்த்திருந்தது!

அனைவரிடமும் கையசைத்து விடை பெற்றுக் கொண்டேன்!

(அடுத்த இதழில் நிறைவுறும்)




### சுடச்சுட......

தினப் பத்திரிகைகளாலேகூட அம்பலப்படுத்த முடியாத அரசியல் செய்திகளை வாரப் பத்திரிகையான 'புதினம்' முதலில் சூட்டோடு தந்து விடுகிறதே!... .. சென்றவார முதல்பக்கச் செய்தி வெளியான பிறகு தமிழரசு மேலிடத்திலிருந்து எத்தனை அறிக்கைகள் வந்துவிட்டன!—நீங்கள் துணிச்சல் காரர்கள்தான்!

கொழும்பு, 13 கே. கந்தசாமி

### கிடுகிடுக்க......

15-10-61 புதினம் முதற்பக்கச் செய்தி எங்களைக் கிடுகிடுக்க வைத்துவிட்டது!—தமிழரசுக் கட்சியார் ஏன் தழம்புகிறார்கள்? திட்டவட்டமான விளக்கம் கொடுக்கட்டும், சுணக்கம் கூடாது.

வவுனியா, ''சித்தன்''

### பிளவு இல்லை?

தலைவர்களை மோதிவிட்டு வேடிக்கை பார்க்க முயற்சிக்கிறீர்களோ. எங்கள் கட்சியில் பிளவு ஏற்படாது. உறுதி!

கல்வியங்காடு. பொன். இரத்தினசிங்கம்

### நாகாக்க!

நாகநாதன் நாகாக்கவேண்டும். தடுப்புக்காவலிலிருந்தும் அவர் அதைப் பழகிக்கொள்ளவில்லையே! 'புதினம்' செய்தி அவருக்கு ஒரு சூடு!

கல்முனை, — மேகலா

### தயார்!

கிழமைதோறும் புன் முறுவலுடன் வெளிவரும் புதினத்தைக் கண்டு நான் மகிழ்கிறேன். வளர்ந்து வரும் இத் தமிழ்ப் பத்திரிகைக்கு என்னால் வேண்டிய சகல உதவிகளையும் செய்யத் தவறமாட்டேன்.

கிராமச் சங்கம், செ. ஜோண்மார்க் ஜே. பி.
வங்காலை. (அக்கிராசனர்)

### டாக் மர்மம் சோக்!

பத்திரிகையுலகில் புரட்சியை தோற்றுவித்த புதினம் மர்மமான விஷயங்களை வெளியிடுவதில் முன்னிற்பது கண்டு களிபேருவகையடைகிறேன். டாக் ஹமர்ஷீல்டின் மரணம் பற்றி புதினம் 8-10-61 இதழில் வெளியிட்ட புதிய தகவல்கள் எம்மை வெகுவாக கவர்ந்து விட்டன.

தெகியோவிற்ற. அறிவழகன்

### அநீதி!

அம்பாறைக்கும் கல்முனைக்கும் இடையில் ஓடும் பஸ் ஒன்றில் 12—10—61 ல் கல்முனை பஸ் நிலையத்தில் மூன்று பிரயாணிகள் ஏறினர். பஸ் கொண்டக்டர் ஒருவருக்கு மட்டும் டிக்கட் கொடுத்தார். தாங்கள் மூவரும் கூட செல்லவேண்டுமெனவும் மூவரையும் ஏற்றிச் செல்லும் படியும் அல்லது டிக்கட்டை திருப்பி எடுத்துக்கொண்டு பணத்தை தரும்படியும் தனியாகச் செல்ல முடியாத பிரயாணி கேட்டார். ''முடியாது'' என்று சொல்லிக்கொண்டே அதிகாரிகள் (பணத்தைக் கொடாமல்) பஸ்ஸை ஓட்டிச்சென்று விட்டனர்!........... நீதியற்ற அதிகாரிகளால் இப்பகுதி மக்கள் பெரிதும் கவலைப்படுகிறோம்.

கலைமதி மன்றம், எம். ஏ. எம் அமானுல்லா.
சம்மாந்துறை. செயலாளர்.

### சட்......சனியன்!

பொன்னாலைக் கோவில் சனியன் உற்சவம் அண்மையில் நடைபெற்றது. இதில் வரும் வரும்படியை —ஒருவரை ஒருவர் நம்பாமல்—இவ்வருடம் ஒரு பொலிஸ் அதிகாரியின் முன்னிலையில் காசை எண்ணி பொறுப்புள்ளவரிடம் ஒப்படைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அறமும் அன்பும் பண்பும் விளங்க வேண்டுமென பழங்காலத்தில்கட்டப்பட்டகோவில்கள் இன்று சந்தேகமும் பொறாமையும் வஞ்சனையும் நிறைந்த கூடங்களாக திகழ்கின்றன! இந்நிலை மாற சனியன் அருள்புரிவாரா?

நெல்லியான். —'நிம்மால்'

### புல்லும் பூவையும்!

யாழ்ப்பாணம் மார்க்கட்டுக்கு முன்னால் மாலை நேரம் நடைபெறும் புல்லுச் சந்தைக்கு புல்லு வாங்க காரிலே வரும் சீமான்கள், சீமாட்டிகளையும் முன்சீட்டில் இருத்திக்கொண்டு வருகிறார்கள். புல்லு வாங்கச் செல்லும் ஐயாவைப் பார்த்துப் பரிதாபப்படவேண்டும்! நல்ல புல்லா என அம்மாவின் விருப்பத்தையறிய நூறுதரம் புல்லைத் தூக்கிக் காட்டுவார்! பணம் கொடுக்கும்போதுகூட அம்மாவின் அனுமதிபெற காருக்கு ஓடிவருவார் ஐயா! என்ன பெரிய இடத்துப் பெண்கள் அப்படித் தெய்வங்களோ?

யாழ்ப்பாணம். ஐ. தி. ச.

Registered as a newpaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

## தாதிகளுக்கு எச்சரிக்கை!

### 'புதினம்' செய்திக்கு கைமேல் பலன்!

ஆஸ்பத்திரிகளில் நிலவும் ஊழல்களை 8-10-61 புதினம் இதழில் இதே பக்கத்தில் அம்பலப்படுத்தியிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தச் செய்தி மேலிடங்களில் பெரும் பரபரப்பை உண்டாக்கி நடவடிக்கை எடுக்கத்தூண்டிவிட்டது!

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமை புரியும் தாதிகள், நோயாளிகளை—சிறப்பாக கர்ப்பிணிகளை சினக்காது அன்போடு பணிவாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமென ஷெ தாதிகளுக்குப் பொறுப்பான தலைவி தாதிகளைக் கூப்பிட்டு எச்சரித்திருப்பதாகத் தெரியவருகிறது!

# தமிழ் பகுதி சமசமாஜிகள் தமிழரசாருடன் சேரலாம்?

## லங்கா சமசமாஜ கட்சியின் மத்திய கமிட்டித் தீர்மானம்

['புதினம்' ஒற்று நிருபர்]

தமிழ் மொழிக்கு உரிமை கோரித் தமிழரசுக் கட்சி வருங்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கும் பட்சத்தில் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் நேரடியாக அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக 'புதினத்'துக்கு நம்பகமான செய்தியொன்று கிடைத்துள்ளது.

மத்திய கமிட்டிக் கூட்டத்தில் தற்கால அரசியல் போக்குகளை ஆராயும்போது தமிழ் மொழியுரிமைப் போராட்டத்திற்கும் லங்கா சமசமாசக் கட்சிக்குமிடையிலுள்ள தொடர்புகள் பரிசீலனை செய்யப்பட்டது.

தமிழ் மக்களின் மொழியுரிமையைப் புறக்கணித்து நாட்டு முன்னேற்றத்தில் கவனம் செலுத்தமுடியாதென்றும், தமிழ் மக்களின் மொழியுரிமையைப் பறிக்கலாகாதென்றும் பல தலைவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள் அரசாங்கத்தின் கடந்தகால நடவடிக்கைகளின் பயனாகத் தமிழ் மக்கள் மேலும் மேலும் தமிழரசுக் கட்சியின் பிடிக்குள் 'உந்தித் தள்ளப்பட்டு விட்டார்களென்றும், தமிழ் மொழியுரிமைக்கு நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில் தமிழரசுக் கட்சியொன்று மட்டுமே இருப்பதால், அக்கட்சி மொழியுரிமைக்காக எடுக்கும் நடவடிக்கைகளில் சமசமாசக் கட்சியைச் சேர்ந்த தமிழர்களும் தீவிரமாகக் கலந்துகொள்ள வேண்டுமென்றும் தலைவர்கள் பலர் கருத்துத்தெரிவித்தார்கள்.

ஆனால் தீவிர வாதிகளான எட்மன்ட் சமரக்கொடி கோஷ்டியினர் அதை எதிர்த்தார்கள் என்றும் அதன் காரணம் தமிழரசுக் கட்சி முதலாளிவர்க்கத்தை ஆதரிக்கும் கட்சியென்றும், மற்றப் பகுதிகளில் வசிக்கும் தொழிலாளவர்க்கத்தின் போராட்டத்துடன் சேர்த்தே தமிழர்கள் தங்களின் மொழியுரிமைக்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் வாதித்ததாக அறியப்படுகின்றது!

இச்செய்தியை நமது உள்ளூர் தமிழ் சமசமாஜிகள் மறுக்கலாம் அவர்கள் சமசமாசக் கட்சிதலைமைக் குழுவிலில்லாத படியால் இத்தீர்மானங்கள்எடுக்கப்பட்டது அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. ஆனாலும்இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நூற்றுக்கு நூறு விதம் உண்மையென்பதை 'புதினம்' நிச்சயமாகதெரிந்துகொண்டுள்ளது,


# 5-ம் வகுப்பு - வினப்பத்திரங்கள்.

பரீட்சையில் வருவனபோன்ற மாதிரி வினப்பத்திரங்களை இந்த மூன்றும் தவணைக் காலத்தில் மாணவர் செய்து பழகுவதனல், பரீட்சையில் மிக இலகுவாக அவர்கள் தேறமுடிகிறது, தமிழ் (பாஷை), கணிதம், சூழல், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தனித் தனியாக புத்தக உருவில் இவ் வினப்பத்திரங்கள் உள்ளன. **விலைகள் மிகக்குறைவு.**

(1) வினப்பத்திரம் - தமிழ் (பாஷை) சதம் 60 (3) வினப்பத்திரம் - சூழல் சதம் 60

(2) வினப்பத்திரம் - கணிதம் சதம் 60 (4) வினப்பத்திரம் - ஆங்கிலம் சதம் 60

(புதிய முறைப்படி திருத்தியபதிப்பு)

எழுதியவர்: வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)

இலங்கை எங்குமுள்ள அநேக பாடசாலைகளில் இவ்வினப் பத்திரங்கள் வருடந்தோறும் உபயோகப்பட்டு வருகின்றன. நீங்கள் இதுவரை உபயோகிக்காவிட்டால் உடனே எழுதுங்கள்.

(தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு உண்டு)

## ஆனந்தா அச்சகம் - புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு; ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி: 'அச்சகம்'